
# கல்லூரி சாலை




## மீண்டும் பள்ளிக்கு

சென்னை, இந்தியா

30-03-2015

யாழ் இந்து 94 பழைய மாணவர்களின்

**சர்வதேச சந்திப்பு**

எவ்விடமேகினும் எத்துயர் நேரினும் எம்மன்னை நின்நலம் மறவோம்



வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந் தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே பல
கலைமலி கழகமும் இதுவே - தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே

எவ்விடமேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள்கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவையியல் கழகமும் இதுவே
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரின கழகமும் இதுவே!


தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப்பெருங் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு.

# CONTENT



04 அதிபரின் வாழ்த்துச் செய்தி



07 நினைவுத் துளிர்கள்

03 சாலை முகப்பு

05 மீண்டும் பள்ளிக்கு - மீண்டிடும் நினைவுகள்

09 நான்கு தசாப்த காலங்களில் என் நெஞ்சம் நிறைந்த நினைவுப் பதிவுகள்

14 நெஞ்சம் நிறைந்த நினைவுகள்...

15 யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எனது நினைவுப் பதிவுகள்

22 சிந்தனை நின்தனக்காக்கி....

26 From the heart of the ex teacher Mr.T.Kangeshapillai

28 A message from former teacher Mr.R.Raveendranathan

29 நீல வெள்ளை ஒளியினிலே...

30 ஈழம் வாழ் இந்துக்களின் உயர் அறிவாலயம் யாழ் இந்துக் கல்லூரி

34 அன்னை மடியில்

39 இந்து அன்னை

40 நினைவழியா நாட்கள்

42 என் நட்பு என் வழிகாட்டி

46 அந்த நினைவழியா நாட்களின் நினைவுகள்

48 யாழ் இந்துக் கல்லூரியில் இருந்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு...

52 யாழ் இந்துவின் நினைவுகளிலிருந்து.......

72 94 Student Profiles



**EDITOR**
**K. SIVASUTHAN**
**13 C ( MATHS)**




**DESIGN & LAYOUT**
**T. NIMALAN**
**13 D ( BIO)**

இவ்மலரில் உள்ள ஆக்கங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் கருத்துக்களுக்கும் தகவல்களுக்கும் அதனை ஆக்கிய படைப்பாளிகளே பொறுப்புடையவராவர்.

*Profiles in this souvenir book are compiled based on the information provided by the JHC GCE(A/L) 1994 batch classmates and published with their consent.*



# சாலை முகப்பு



வணக்கம்,

எம் பாடசாலைக் காலம். அது என்றும் எம் இதயங்களை சிலிர்க்க வைக்கும் ஒரு கனாக் காலம் - மீண்டும் மீண்டும் நாம் வாழக் கேட்கும் வரம் - நட்பு, குறும்புகள், சுகங்கள், சுமைகள், வாலிபம், அறிவு, ஆளுமை விருத்தி என்பவற்றின் கலவையாய் எமக்கு வாழ்வியல் அனுபவம் தந்த களம் - அர்ப்பணிப்பு மிக்க ஆசிரிய ஆளுமைகளின் வழிநடத்தலில் நாம் வளர்ந்த பாசறை - யுத்த பூமியிலே, குண்டுகளின் பொழிவிற்கிடையே நாம் எம் வாழ்வை அதன் முழுமையிற்கு வாழ்ந்திருக்கின்றோம்... கொண்டாடியிருக்கின்றோம் என்பதன் சான்றாய் அமைந்த அற்புத நாட்கள்.

அந்த நினைவுகள் பகிரப்படவேண்டும்.. பதிவு செய்யப்படவேண்டும் எனும் உந்துதலால் இந்த 'கல்லூரிச் சாலை' எனும் மலர், க.பொ.த (உயர்தரம்) 1994 பிரிவைச் சேர்ந்த மாணவர்களின் ஒன்றுகூடலாகிய 'மீண்டும் பள்ளிக்கு சர்வதேச சந்திப்பு 2015' நிகழ்வில் வெளியிடப்படுகின்றது.

எம் ஆசிரியர்கள் மற்றும் தோழர்களின் உள்ளத்து உணர்வுகளையும், எம்மவர்களின் சுயவிபரங்களையும் தாங்கி உங்களிடம் இன்று வரும் இம்மலர், அழகிய பெறுமதி மிக்க ஆவணமாய் என்றென்றும் உங்களோடிருந்து 'யாழ் இந்து' எனும் உணர்வு ஊட்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

வட மாநிலக் கல்விப் பாரம்பரியத்தின் தனிப்பெரும் குறியீடாய் - தமிழர்கள் தலை நிமிரும் ஒரு பெரும் கலையகமாய் - உலகெலாம் பரந்து வாழும் இந்துவின் மைந்தர்களை பின்னிப் பிணைத்து இணைத்து வைத்திருக்கும் உன்னத உணர்வாய் அமைந்த எம்மன்னை காட்டிய பாதையில் எம்மவர்கள் தொடர்ந்து உத்வேகத்துடன் பயணித்து எம்பள்ளிக்கும் தமிழ் சமூகத்திற்கும் மேலும் மிடுக்கு சேர்ப்பார்கள் என்பதன் சான்றாய் அமைகின்ற 'மீண்டும் பள்ளிக்கு சர்வதேச சந்திப்பு' விழாவில், இம்மலர் வெளிவர கைகொடுத்த அனைவருக்கும், குறிப்பாக அழகாய் வடிவமைப்பு செய்த நண்பர் த.நிமலன் அவர்களுக்கும் நன்றி பகிர்ந்து விடைபெறுகின்றேன்...

கல்லூரிச் சாலையில் பயணிக்கத் தொடங்குங்கள்....



நன்றி

**கு. சிவசுதன்**

(வகுப்பு 13C கணிதம் )

மலராக்க குழுவின் சார்பில்

# JAFFNA HINDU COLLEGE
## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம் - இலங்கை

Phone : 021 222 2431, Fax 021 222 2431
E.mail : principal @ jhc.lk Web page : www.jhc.lk

Jaffna - Sri Lanka


# அதிபர் செய்தி



MR. IYAMPILLAI THAYANANDARAJAH
(B.COM HONS, PGDE, PGDEM, MED)

PRINCIPAL OF JAFFNA HINDU COLLEGE

இந்துவின் முன்னாள் மைந்தர்கள் தங்கள் அன்னைக்கு ஆற்றிவரும் அரும்பணிகள் எண்ணிலடங்கா.

ஈழவள நாட்டிலும் இன்னும் பல சர்வதேச நாடுகளிலும் அவர்கள் பற்பல உயர்நிலைகளில் இருந்து தாம் கற்ற கல்லூரிக்கும் தாய் நாட்டுக்கும் புகழைச் சேர்ப்பது பெரும் பேறாகும்.

இன்று இந்து அன்னை தலை நிமிர்ந்து உயர்ந்து நிற்பதற்கு இம்மைந்தர்கள் காரணம் என்றால் அது மிகையாகாது.

அவர்கள் கல்லூரியின் மகுட வாசகமான 'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' எனும் வள்ளுவன் வாசகத்திற்கு இணங்க ஒழுகுவது பேருவகை அளிக்கிறது.

பாடசாலை நாட்களில் கல்வி கற்ற வேளை இவர்கள் பெற்ற அறிவு, அனுபவம், நல்ல முறையில் வழிப்படுத்திய ஆசிரியத்துவம் அவர்கள் நெஞ்சில் நீங்காத நினைவலைகள் என்பவற்றை மீட்டுப் பார்ப்பதற்கு இவ் ஒன்று கூடல் வாய்ப்பாக அமைகின்றது.

அந்த வகையில் இன்று 1994ம் ஆண்டு க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்ற மாணவர்கள் 'மீண்டும் பள்ளிக்கு சர்வதேச சந்திப்பு 2015' என்ற தலைப்பில் சென்னையில் கூடி 'கல்லூரிச் சாலை' எனும் மலரை வெளியிடுவது எம்மை மட்டற்ற மகிழ்ச்சி உறச்செய்கிறது.

இம்மலர் சிறக்க சிவஞான வைரவப் பெருமானின் நல்லாசியினை வேண்டி வாழ்த்துகின்றேன்.

ஐ. தயானந்தராஜா

*I. Thayanandarajah*
Principal
Jaffna Hindu College
Jaffna



# மீண்டும் பள்ளிக்கு மீண்டிடும் நினைவுகள்



எமது நாற்பதாவது அகவையை ஒட்டியும், பாடசாலையின் 125ஆவது ஆண்டு நிறைவையும் நினைவிற் கொண்டு உருவாக்கப்பட்ட கருவே மீண்டும் பள்ளிக்கு சர்வதேச சந்திப்பு. என்றுமே கல்லூரி நட்பு வித்தியாசமானது. கடைசிவரை நீடித்து வாழ்வுடன் இரண்டறக்கலக்கும் உன்னத உணர்வு அது. பள்ளிக்கால நினைவுகளை பகிர்ந்து கொள்ள வாழ்வில் கிடைத்த அரிய சந்தர்ப்பம் இது. இப்பொன்னாள் நினைவழியா நாளாக உங்கள் வாழ்வில் இரண்டறக் கலக்கும் என்பதில் ஐயமில்லை. இதை எழுதும் போது கூட 30ம் திகதி சந்திக்கும் பேரானந்தத்தை 3ம் திகதி பிரியும் நினைவு மூடவே செய்கின்றது.

'வைரமுத்து பிறப்பான் என்று வயிற்றில் நீ சுமந்ததில்லை, வயிற்றில் நீ சுமந்ததொன்று வைரமுத்து ஆனது' என்ற கவிஞரின் வரிகளுக்கிணங்க மருத்துவர், பொறியியலாளர், கணக்காளர், போராளி என்று தெரியமுன்பே உருவாகிய பிணைப்பு இது. தேவையறிந்து, பட்டமறிந்து, பதவியறிந்து, செல்வமறிந்து சேர்ந்த சேர்க்கையல்ல பாடசாலை நட்பு. புகழுக்காக சொல்லவில்லை, யாழ் இந்துவில் கல்வி கற்காதவர்கள் நட்பின் வரைவிலக்கணத்தினை வாசித்து மட்டுமே அறிந்திருப்பர் அல்லாமல் யாசித்திருக்க வாய்ப்பே இல்லை.

மீண்டும் பள்ளி நிகழ்வுக்கு கடல் கடந்து வருகை தந்த நீங்கள் அனைவரும் நிச்சயம் போற்றப்படவேண்டியவர்கள். அத்துடன் இந்நிகழ்வு சிறப்புற நிதியுதவிகளை தந்த எமது நண்பர்களை அனைவரிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துகொள்வதில் நிறைவடைகின்றோம்.

மேலாக, இந்த கருவிற்கு உயிரூட்டி, உணர்வூட்டி, உருவம் கொடுத்தவர்களில் ஸ்ரீபன் (13C), நிமலன் (13D), ஜங்கரன் (13A), சிவசுதன் (13E), சிவசுதன் (13C), சசிவர்ணன் (13C), சேரலாதன் (13C), குலதீரன் (13C), மகேஸ்வரன் (13C), மற்றும் சதீஸ்கரன் (13B), பாலேந்திரன் (13C), சாரங்கன் (13C), குமரதேவன் ஆகியோர் முன்னிடம் பெறுகின்றனர்.

இவர்களின் தியாகங்கள் அளப்பரியவை. கடந்த ஒரு மாதமாக தூக்கம் துறந்து, சொந்தம் துறந்து, பசி துறந்து மீண்டும் பள்ளியே எங்கள் மூச்சென முன்னின்று உழைத்தனர். இந்த முயற்சியின் முத்தே மீண்டும் பள்ளியெனும் நினைவழியா நாட்களின் மீண்டிடும் நினைவுகள்.

இந்துவால் இணைவோம் இந்துவை வளர்ப்போம்

வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி வையகம் புகழ்ந்திட என்றும்.

குணரத்தினம் பார்த்தீபன்
(13C Maths)



கடந்த கால நினைவுகளை சிந்தித்துப் பார்க்கும் போது சிந்தனைத் துளிர்கள் பற்பல மனதில் தோன்றுகின்றன.


அதில் ஒரு சிலவற்றை மட்டுமே குறிப்பிட விரும்புகின்றேன்.

நான் யாழ் இந்துக் கல்லூரிக்கு அதிபராக ஜனவரி 1991 இல் செல்லவிருக்கும் செய்தியை முன்கூட்டியே பலரும் அறிந்திருந்தனர்.

அவ்வேளையில் யாழ் இந்துவில் உயர்தர மாணவர்களின் கல்லூரிப் பகிஷ்கரிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நான் பதவி ஏற்பதற்கு ஒரு சில நாட்களுக்கு முன் ஒரு சிறு கூட்டம் என்னைக் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு வெளியே சந்தித்தது (இக்குழுவில் இன்று ஒன்று கூடலில் கலந்து கொள்ளும் உங்களில் யாராவது இருந்திருக்கலாம்).

'நீங்கள் அங்கு அதிபராக வருவதாக இருந்தால் எங்கள் பிரச்சினையைத் தீர்த்து விட்டுத்தான் வரவேண்டும்' என்று அவர்கள் சிறிது மிடுக்குடன் கூறினார்கள்.



நான் அதிபராக வந்த பிற்பாடுதானே பிரச்சினையைத் தீர்க்கலாம்.. என்று நான் கூறினேன்..

இக்கூற்று அவர்களுக்கு நன்றாகப் புரிந்திருக்க வேண்டும். அவர்கள் ஒன்றும் பேசவில்லை. பின்பு நான் தான் கூறினேன். எந்த அதிபரும் பிரச்சினையை விரும்ப மாட்டார்கள் எனவே நான் பிரச்சினைகளை தீர்த்து வைப்பேன் என்று. அவர்கள் சென்று விட்டனர்.

நான் கல்லூரிக்கு வந்த இரண்டாம் நாள் நான் காரியாலயத்தில் இருந்தேன்.

கல்லூரியில் வேலை செய்யும் உதவியாளர்கள் கடகடவென ஜன்னல்களை சாத்தினார்கள். வீட்டிற்குச் செல்வதற்கு ஆயத்தம் நான். ஏன் ஜன்னல்களை சாத்திப்

# நினைவுத் துளிர்கள்......



பூட்டுகின்றீர்கள்? எனக் கேட்டேன். அதுவே வழக்கம் என்றனர்.

இப்போது நேரம் பி.ப 2.00 மணி. பின்னர் நான் சாத்துகிறேன். நீங்கள் செல்லுங்கள் என்றேன்.

அன்று முதல் கல்லூரி காரியாலயம் பி.ப.6.00 மணி வரை திறந்திருக்கும்.

8D வகுப்பு ஆசிரியர்கள் அனைவரும் அவ் வகுப்பை அடக்க முடியாது என முறைப்பாடு வைத்தனர். வெளியிலிருந்து பரீட்சை நடத்த வந்த ஆசிரியர் கூட அவர்களின் நடத்தையைப் பார்த்துக் குறைபட்டார்.

தரம் 8 பொதுப்பரீட்சைக்கு ஒரு ஆசிரியை மேற்பார்வையாளராக அனுப்பப்பட்டிருந்தார்.

மூன்று மணித்தியால வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களில் விடை எழுதி முடித்து விட்டார்கள்.

ஆனால் மீதி ஒரு மணித்தியாலமும் அவர்களை மண்டபத்திலேயே மறித்து வைக்கப்பட்டனர்.

விடைத்தாள்களை வாங்கியதும் அவர்கள் மேசையின் மேல் ஏறிப்பாய்ந்து முண்டியடித்துக் கொண்டு சத்தத்துடன் வெளியேறினர்.

இச் செயற்பாட்டினைப் பற்றி மேற்பார்வையாளர் முறையிட்டுள்ளார்.

மாணவர்களின் செயற்பாடு மன்னிக்கக் கூடியதா? இம் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கொடுத்த தண்டனைகளோ அளவுக்கடங்காது.

அவர்களை நல்வழிப்படுத்த நான் விரும்பி சில நடவடிக்கைகளை எடுத்தேன். அவ் வகுப்பிற்கு நான் சென்று அவர்களுடன் பத்தும் பலதுகளையம் பேசி இறுதியில் சில ஒழுங்குகளை வகுப்பில் செய்வோமா? என்று வினாவினேன்.

அவர்களும் சம்மதம் தெரிவித்து தங்கள் வகுப்பில் நிலவும் பிரச்சினை என்ன என்பதை ஒரு கிழமையில் எழுதி தந்தார்கள்.

அதனை வாசித்ததும் அங்கு பாரதூரமான பிரச்சினைகள் இருந்ததை அறியக் கூடியதாக இருந்தது. இப்பிரச்சினையை உருவாக்குபவர்களுக்கு உரிய தண்டனைகளை அவர்களே தீர்மானித்தார்கள்.

இவ்வாறு அவர்களுக்கு உரிய ஒரு கணிப்பையும், பொறுப்புக்களையும் வழங்கினேன்.

தங்களைத் தாங்களே நிர்வகிக்கின்ற ஓர் சூழலை உருவாக்கி இரு மாதங்களில் அவர்களில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுப் பொறுப்புடன் நடக்கத் தொடங்கினார்கள்.

பிற்பாடு கே.கே.எஸ் வீதிப் பக்கம் இருந்த தாமரைத் தடாகப் பகுதியைப் பொறுப்பேற்றுத் திறமையாக செயற்பட்டார்கள். இந்த மாற்றம் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

எனக்கு மரம் செடிகளில் மீது அலாதியான விருப்பம் உண்டு.

அந்த வகையில் கல்லூரியின் தெற்குப் பகுதியில் மலை போல் அமைத்து நீர் அருவி ஓடுமாப்போல் உருவாக்கியிருந்தேன்.

நிழல் மரங்களும் நாட்டப்பட்டன.

அப்பகுதியில் இருந்த சிற்றுண்டிச்சாலை கூட ஒரு தேக்கு மரத்தை மையமாக வைத்து வட்ட உருவில் அமைக்கப்பட்டிந்தது. ஒரு இயற்கைச் சூழல் காணப்பட்டது.

இப்பகுதி ஒரு சோலையாகத் துலங்க வேண்டும் என்பது எனது நோக்கம்.

எவ்வாறாயினும் நான் எப்போ இளைப்பாறுவேன் என்று காத்திருந்த கூட்டம் நான் இளைப்பாறிய பின் சோலையையும் அழித்து மலையை தரை மட்டம் ஆக்கியது.

கல்லூரியின் வடக்குப் பகுதியிலும் மரங்கள் நட்டுச் சோலையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கல்லூரியின் வடமேற்கு மூலையில் இருந்த வகுப்பறைகள் வெயிலில் காய்ந்தன.

இதற்காக அதில் ஒரு வேப்பமரம் நட்டு நீர் ஊற்றி வளர்க்க விரும்பினேன்.

அருகில் இருந்த வகுப்பிற்குச்



சென்று யார் இந்த மரத்திற்கு நீர் ஊற்றி வளர்ப்பீர்கள் என வினாவினேன்.

ஒரு சின்னப் பையன் முன் வந்து தான் நீர் ஊற்றி வளர்ப்பதாக கூறினான்.

அந்த வேப்பமரம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவர் நீர் ஊற்றி வளர்த்து அதன் பயனாக அம் மரம் ஒரு விருட்சமாக இப்போது தோற்றமளிக்கிறது.

இம் மரத்திற்கு நந்தன் வேம்பு என்று மாணவர்கள் சூட்டியுள்ளார்கள்.

இந்த நந்தன் தான் பிற்காலத்தில் வைத்திய கலாநிதி நந்தகுமாராக மாறி தமிழ் பகுதிகளில் அரும்பெரும் சேவையாற்றி வருகின்றார்.

இச்சந்தர்ப்பத்தில் விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட மரம் நடுகைப் போட்டியில் எமது கல்லூரி பங்கு பற்றி முதலிடத்தையும் ரூ 10000/= வை பரிசாகப் பெற்றதையும் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

தரம் 8 இல் (1993) ஒரு மாணவன் மிகவும் திறமை சார்ந்தவனாக ஆசிரியர் எல்லோரினதும் கவனத்தை ஈர்த்த ஒருவராக இருந்தார்.

அவருடைய பாடங்களின் மீதுள்ள கவனம் படிப்படியாக குறையத் தொடங்கி ஆசிரியர்களின் கண்டிப்புக்கு ஆளானார்.

இவருடைய செயற்பாடு ஆசிரியர்களால் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

நான் வழமையாக ஆசிரியர் இல்லாது வகுப்பில் இருந்தால் அதற்குள் புகுந்து மாணவர்களுடன் உரையாடுவது வழக்கம்.

அந்த வகையில் குறிப்பிட்ட மாணவனின் வகுப்பிற்கு செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது.

நான் மாணவர்களுடன் கலந்துரையாடி குறிப்பிட்ட மாணவனையும் கவனித்துக் கொண்டேன்.

அவ்வேளையில் குறிப்பிட்ட மாணவனிற்கு பார்வைக்குறைபாடு உள்ளதை அறிய முடிந்தது.

அதன் பயனாக அவன் சிகிச்சை பெற்றுக் கல்வியில் நல்ல பெறுபேறுகளைப் பெற முடிந்தது.

வகுப்பிற்குச் செல்லும் ஆசிரியர்கள் இதனை அவதானிக்காமல் விட்டமை ஒரு கவலைக்குரிய விடயமாகும்.

- நான் அதிபராக இருந்த வேளையில் க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் மிகச் சிறந்த ஆசிரியர்களே இருந்தனர்.

நான் இங்கே ஒரு விஞ்ஞான ஆசிரியரைப் பற்றிக் குறிப்பிடுகின்றேன்.

அவர் மிகவும் சிறந்த ஒரு விஞ்ஞான ஆசிரியராக கருதப்பட்டு பலரும் அவரை நாடிச் சென்றனர்.

இவ் ஆசிரியர் சனி, ஞாயிறு தினங்களில் ஏகப்பட்ட பிரத்தியேக வகுப்புக்களை நடாத்தி விட்டு ஒவ்வொரு திங்களும் லீவில் நிற்பார்.

அவ் நடத்தையைப் பற்றி அதே வகுப்பைச் சேர்ந்த ஒரு சில மாணவர்கள் எனது கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

நேரடியாக ஒரு ஆசிரியருடைய இந் நடத்தையைப் பற்றி (ஆசிரியர்களுக்கு 30 நாட்களுக்கு மேற்பட்ட விடுமுறைகள் பாடசாலை விடுமுறை நாட்களுக்கு புறம்பாக உண்டு) அவரிடம் கதைக்க முடியாத நிலையில் நான் இருந்தேன்.

குறிப்பிட்ட ஆசிரியரின் வகுப்பிற்குச் சென்று வழமை போல் பொது விடயங்களைக் கதைத்து விட்டு இவ்வாறு விடுமுறை எடுக்கும் ஆசிரியரால் உங்கள் கல்வி பாதிக்கப்பட்டால் அவரை வேறு வகுப்பிற்கு மாற்றல் செய்தால் என்ன என வினாவினேன்.

அவர்கள் எவரும் சம்மதிக்கவில்லை.

அப்போது தான் எனக்கு விளங்கியது.

ஒரு சிறந்த ஆசிரியரை அவர் மீது என்ன குறை இருந்தாலும் மாணவர்கள் விரும்புவார்கள் என்று.

நான் மாணவர்களின் மனதை அறியாமல் அவரை மாற்றி இருந்தால் மீண்டும் அவரை அதே வகுப்பிற்கு மீள அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் இல்லையா? நான் இங்கு என் மனதில் எழுந்த பல நினைவுத்துளிகளில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட்டுள்ளேன்.

1994ஆம் ஆண்டு உயர்தரம் கற்ற மாணவர்களின் வாழ்க்கை ஒளிமயமாக அமைய வேண்டும் என வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**அ. பஞ்சலிங்கம்**
முன்னாள் அதிபர்.

# நான்கு தசாப்த காலங்களில் என் நெஞ்சம் நிறைந்த நினைவுப் பதிவுகள்

நம் முன்னோர்களாகிய ஆத்மீகவாதிகளினதும், அருளாளர்களினதும், நற்சிந்தனையாளர்களினதும், கல்விமான்களினதும் உள்ளத்தில் உதித்து அத்திவாரமிடப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 125 ஆண்டுகளாக தமிழர் தம் தலைநிமிர் கழகமாக, கலைபயில் கழகத்தின் குரலாக தமிழர் வாழ்வில் அறிவியல் வசந்தத்தை வீசிக் கொண்டிருக்கிறது.

பிரமனின் இதயத்தில் உதித்த மானசசரஸ்சு போல இந்து அன்னையின் மைந்தர்களும் உலகமெங்கும் உலா வந்து நீல, வெள்ளை வர்ணக் கொடியை

சர்வதேசமெங்கும் பட்டொளி வீசி பறக்க வைத்து கல்லூரியின் சாதனைகளையும் பெருமைகளையும் பறைசாற்றி வருகின்றனர்.

யாழ் இந்துக் கல்லூரி என்னும் கல்விப் பேட்டையில் நான்கு தசாப்த காலங்களாக ஆசிரியராக, உப அதிபராக, பிரதி அதிபராக, பதில் அதிபராக, சேவை செய்யும் பேறு கிடைத்தமை பெறுதற்கரியதாகும்.

என் ஓய்வு நிலைக்குப் பின்பும் கல்லூரிப் பழைய மாணவர்களாலும் கல்லூரிச் சமூகத்தினாலும் மற்றும் கல்லூரிப் பற்றாளர்களாலும் மதிப்பளிக்கப்பட்டு பாராட்டப்படுகிறேன் என்பது நான் ஓரளவு நிறைவான சேவையைக் கல்லூரிச் சமூகத்திற்கு அளித்திருக்கின்றேன் என்ற மகிழ்வைத் தருகின்றது.

ஐக்கிய இராச்சியப் பழைய மாணவர் சங்கம் 2007ஆம் ஆண்டு கலையரசி சஞ்சிகை வருடாந்த வெளியீட்டு விழாவுக்குப் பிரதம விருந்தினராக லண்டனுக்கு அழைத்துக் கௌரவித்தமையும், கொழும்பு பழைய மாணவர் சங்கம் 2015 ஜனவரியில் மகத்தான சேவை விருது வழங்கி கௌரவித்தமையும், தற்போது 1994 உயர்தரப் பிரிவு மாணவர்களின் ஒன்று கூடலக்கு இந்தியாவுக்கு என்னை அழைத்துள்ளமையும்



எனது சேவைக்கும் கல்லூரி மீது கொண்டுள்ள பற்றுக்கும் கிடைத்த பேறாகக் கருதுகிறேன்.

எனவே நான் பெற்ற பட்டறிவை உங்களுடன் பகிர்வதற்கு சில நிமிடங்கள் என்னோடு பயணிக்குமாறு வேண்டுகின்றேன்.

ஆசிரியத் தொழில் செய்பவர்கள் முதலில் தமது தொழிலை நேசிக்க வேண்டும். அதனால் பயன் மாணவர்களுக்குக் கிடைக்கும். பயன் கிடைத்தால் மாணவர்களும் சமூகமும் என்றும் மதிப்பளிக்கும். ஆயினும் கல்வி அறிவை ஊட்டுவதால் மட்டும் ஒருவன் உயிர்த்துடிப்புள்ளவனாக - சமூகத்திற்குரிய நற்பிரஜையாக மாட்டான்.

அவனிடத்தில் மூடிக்கிடக்கும் மனித விழுமியங்களை, அறிவுப் பிரவாகத்தை, ஆக்கத்திறன்களின் வினைத்திறன்களை, இதயத்தால் அரவணைக்கும் பண்புகளை மனித குலத்தின் நன்மைக்காக வினைத்திறன் கொண்ட விளைதிறனுடையவனாக உருவாக்க வேண்டும். இதுவே ஆசிரியத்துவத்தின் பூரணத்துவமாகும்.

அந்த வகையில் யாழ் இந்துக்கல்லூரி மாணவர் உய்த்துணர வல்லாராகவும், பகுத்தறிவை விரைவில் பிரயோகிக்கக் கூடியவராகவும், மற்றவர்களுடன் சுமுகமாகப் பழகும் பாங்குடையவராகவும், சமூக இன்ப துன்பங்களில் பங்கெடுப்பவராகவும், செயற்படுவதில் தனித்துவமிக்கவர்களாகவும் விளங்குகிறார்கள்.

இவற்றை கல்லூரியின் விளையாட்டு மைதானமும் கல்லூரியில் செயற்படுகின்ற சங்கங்கள், கழகங்கள், மன்றங்கள் என்பனவும் கடமையுணர்வும் அர்ப்பணிப்பும் தியாகமும் மிக்க ஆசிரியர்களின் படிமங்களுமே இவர்களிடத்தில் பதியப்பட்டுப் பரிணாமங் கண்டு பல்வேறு பரிமாணங்களில் பரிணமிக்கின்றன.

இந்து மைந்தர்களின் சாதனைகள் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக எழில்பெற்று வருகின்றன.

அறிவியல் ஆராய்ச்சிகள், சாதனைகள் பற்றிய தகவல்கள் அடுக்கடுக்காக நாள்தோறும் கேட்கலாம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

சற்று முன்னர் கிடைத்த தகவல் என்று கூறுமளவிற்கு சாதனைகள் புத்தாக்கம் பெற்று

மாற்றமடைகின்றன.

இதை மேன்மேலும் மெருகூட்டுவதாக யாழ் இந்துக் கல்லூரி உயர்தரம் 1994 பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் சென்னையில் ஒன்று கூடி மீண்டும் பள்ளிக்கு சர்வதேச சந்திப்பை நடாத்தி கருத்தாடல் செய்து இரை மீட்டுப் பார்ப்பது வரலாற்றுப் பதிவாகும்.

இந்துவில் எனது முதலாவது அத்தியாயம் ஆரம்பமாகிய நினைவலைகள் உள்ளத்தில் எழுகின்றன. நான் கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர்தரக் கணிதப் பிரிவில் கற்றுக் கொண்டிருந்த காலத்தில் யாழ் இந்துக் கல்லூரியின் வீரியத்தையும் கணித்தில் அதன் முதன்மைத் தன்மையையம் அறிந்திருந்தேன்.

கணிதம் கற்பித்த ஆசிரியர் திரு. வரதராஜப் பெருமாள் அவர்களின் சிறந்த கற்பித்தல் முறைமையையம் தெரிந்துமிருந்தேன். என்னை அறியாமலே யாழ் இந்து பற்றிய எண்ணம் என்னை ஆக்கிரமிக்கத் தொடங்கியது.

இங்கே தான் இந்துவின் முதல் அத்தியாயம் துளிர்விட ஆரம்பிக்கிறது.

நான் இந்துவில் முதல் கால் அடி வைத்து உயர்தரப் பரீட்சை எழுதுவதற்குத்தான்.

எனது பரீட்சை நிலையமாக இந்துக் கல்லூரி அமைந்திருந்தது.

பிரார்த்தனை மண்டப மேல்மாடியில் பரீட்சை எழுதினேன். இந்துக் கல்லூரியில் சேவையாற்ற வாய்ப்பும் கிடைக்கமென்று அப்போது நான் நினைக்கிவில்லை.

நான் பல்கலைக்கழக கணிதம் (சிறப்பு) படிப்பை முடித்துக் கொண்ட காலத்தில் அதிபர் இ. சபாலிங்கம் அவர்களால் கல்லூரிக்கு வருமாறு செய்தி அனுப்பப்பட்டது. வசதிகள் சேவைக் கட்டணத்தில் கற்பிக்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். ஏற்றுக் கொண்ட நான் தரம் 13 மாணவர்களுக்கு கணித பாடம் கற்பிக்கத் தொடங்கிய வேளையில் அம்மாணவர்கள் என்னைப் பார்த்து தங்களுக்கு ஏற்கனவே 12 ஆசிரியர்கள் கற்பித்து சென்று விட்டார்கள் என்றும் நீங்கள் 13 ஆவது ஆசிரியர் என்றும் கூறினார்கள்.

12 ஆசிரியர்கள் தங்களை நிலைப்படுத்த முடியாமல் சென்று விட்டார்கள் என்ற செய்தி என் உள்ளத்தில் அச்சத்தையும் ஆதங்கத்தையும் ஏற்படுத்தத்தான் செய்தது. ஆயினும் நான் நம்பிக்கையையும் துணிவையும் விடவில்லை. கண்டிப்பும் அவதானமும் மிக்க அதிபர் திரு. இ. சபாலிங்கம் அவர்கள் ஒரு வாரம் கழிந்த பின் என்னை அலுவலகத்திற்கு அழைத்தார்.

என்ன சொல்லப் போகிறாரோ என்று அச்சத்துடன் நுழைந்தேன் என் கற்பித்தல் திறனைப் பாராட்டி உற்சாகமளித்தார்.

மாணவர்களுக்கு உமது கற்பித்தலில் விருப்பம் ஏற்பட்டுள்ளது என்று கூறி மேலும் சனி ஞாயிறு தினங்களில் பிரத்தியேகமாக கற்பிக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

அதற்காக ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் ஒவ்வொரு வகுப்புக்கு ஒரு ரூபா பணம் எனக்கு கொடுக்கும் படியும் மாணவரைக் கேட்டுக் கொண்டார்.

அப்போது கல்லூரி எனக்கு அளித்த மாதச் சம்பளம் 300 ரூபா. அன்று அவர் அளித்த ஊட்டமும் ஏற்றமும் அக்கால கட்டத்தில் (எனது தந்தை ஒரு சாதாரண விவசாயி, எனக்கு ஆறு சகோதரிகள், குடும்பத்தில் நான் மட்டும் ஆண் பிள்ளை) எனக்குப் பெரும் நிதிச்சேவையாயிற்று. அன்று என் வாழ்வில் வீசத் தொடங்கிய வசந்தம் இன்று வரை ஓயாமல் உள்ளது.



நான் பாடசாலையில் காலடி வைத்த காலத்தில் கல்லூ ரியின் பௌதிக வளங்கள் மிக்க குறைவாகவேயிருந்தன.

பிரார்த்தனை மண்டபமும் மேல்மாடியும், கல்லூரி வீதியின் தெருவோர வகுப்பறைகள், சபாரத்தினம் ஞாபகார்த்த அலுவலக மண்டபம், விடுதி மண்டபம், குமாரசுவாமி மண்டபமும் அதற்குக் கீழே உள்ள வகுப்பறைகளும் மாத்திரமே கட்டிடங்களாகக் காட்சியளித்தன.

பழைய ஞானவைரவர் ஆலயமும் வடக்குப் பக்கத்தில் ஓரமாக அமைந்திருந்தது. ஆனால் தற்போது பல இருமாடி, மூன்று மாடிக் கட்டிடங்கள் வானத்தைத் தொடுமளவிற்கு கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன.

புதிய ஞான வைரவர் ஆலயம் பொருத்தமான இடத்தில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. குமாரசாமி மண்டப



வளாகத்தில் மேற்புறமாக உள்ள நூல் நிலையமும், ஆய்வு கூடங்களும், தென்புறமாக உள்ள இருமாடிக் கட்டிடமும், கூடைப் பந்தாட்டத்திடலும் பின்னர் அமைக்கப்பட்டவையாகும்.

சிறிய அளவில் இருந்த மைதானமும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

உலக மையக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு நொடிக்கு நொடி மாறிவரும் கல்வி மாற்றத்தினை வளப்படுத்திக் கொள்வதற்காக பல கணனிக் கூடங்கள் புத்தாக்க மயப்படுத்தப்பட்டுள்ளன.

கல்லூரியின் நான்கு நுழைவாயில் அலங்கார வளைவுகள் கண்ணுக்கு இனிய காட்சிகளை வழங்குகின்றன. அழகுற அமைந்துள்ள ஞானவைரவர் ஆலயம் அருள் மயத்தை நாடித் தேட வைக்கின்றது. வளாகத்தில் அமைந்து எழில் கொஞ்சும் பூஞ்சோலை கற்றலுக்கேற்ற கவின் சூழலை மிளிர வைக்கின்றது.

இன்று தெருவோர வகுப்பறைகள் முற்றாக அகற்றப்பட்டு மூன்று மாடிகளைக் கொண்ட நவீன அலுவலகக் கட்டிடம் நான்கு தொகுதிகளாக வகுக்கப்பட்டு நிர்மானிக்கப்பட்டு வருகின்றது.

இவையெல்லாம் அவ்வப்போது இருந்த அதிபர்களின் முயற்சியாலும் அரச உதவியினாலும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பினாலும் அமைக்கப்பட்டவையாகும். அதிபர் அ. பஞ்சலிங்கம் அவர்கள் மைதான விரிவாக்கதிற்கு அவர் காலத்தில் சேவையாற்றிய ஆசிரியர்களையும் பங்களிக்கச் செய்திருந்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்னும் விருட்சத்தின் கிளைகளில் பூத்துச் செழிக்கும் நன் மலர்களாக கல்லூரியை நிர்வகித்த அதிபர்கள் விளங்கினார்கள்.

அவர்கள் ஒவ்வொருவரிடமும் நிறைந்திருந்த திறமைகள் ஓங்கி ஒலித்தபடியால் கல்லூரியின் மகிமையும் பெருமையும் புதிய புதிய சரித்திர சாதனைகளைப் படைத்தன.

1973இல் நான் இந்துவில் இணைந்த போது அதிபராக கடமையாற்றியவர் திரு. இ. சபாலிங்கம் அவர்கள். இவரின் நிர்வாகம் மிகவும் கண்டிப்பானது. முகாமைத்துவத்திறன் மிக்க இவர் முடிவுகளை வேகமாகத் தீர்மானிக்கும் ஆற்றலுடையவர்.

அதிபர் கதிரையில் கிடக்கும் சால்வையே கல்லூரி நிர்வாகத்தினை நடத்திச் செல்லக் கூடியது. நிர்வாகியாகப் பிறந்தவர். (Born administrator) என்று பெயர் பெற்றவர். தரப்படுத்தல் நடைமுறையில் இருந்தபடியால் இவர் காலத்தில் அதிக மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல முடியவில்லை.

இவர் சிறந்த விளையாட்டு வீரனாக திகழ்ந்த படியால் விளையாட்டுத்துறையும் இவர் காலத்தில் சிறந்து விளங்கியது. திரு. P.S. குமாரசுவாமி அவர்கள் 1995 இல் அதிபராகப் பொறுப்பேற்றார்.

ஊர்ப் பெரியோர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரோடும் மிக அன்போடும் உறவோடும் பழகும் இயல்பினைக் கொண்டவர்.

கல்லூரிக்கெனவே பிறந்தவர் எனக் கூறுமளவிற்கு கல்லூரியுடன் ஒன்றிப் போயிருந்தவர்.

தரப்படுத்தல் முறை 1977 இல் நீக்கப்பட்டமையால் மீண்டும் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகினர்.

விளையாட்டுத் துறைக்கு வழங்கிய ஊக்கத்தினால் யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் (J.S.S.A) நடாத்தப்பட்டு வந்த மெய்வல்லுநர் போட்டியில் தொடர்ந்து 10 வருடங்கள் Champion பெற்றதுடன், 1976 இல் உதைபந்தாட்டப் போட்டியிலும் கல்லூரி Champion பெற்றுக் கொண்டது.

கல்லூரி கடமைகளை முடித்துக் கொண்டு சுன்னாகத்திலுள்ள தனது வீட்டிற்கு கடைசி பஸ்ஸில் செல்வதால் இவரை எல்லோரும் படபஸ் என்று வாஞ்சையுடன் செல்லமாக அழைத்தனர்.

1982இல் அதிபராகப் பொறுப்பேற்ற திரு. S. பொன்னம்பலம் அவர்கள் மாணவர்களது ஒழுக்கங்களையும், நடையுடை பாவனைகளையும் அவதானித்துக் கண்டிப்புடன் வழிப்படுத்தினார். ஆசிரியர்களுடனும் கண்டிப்புடன் நடந்து கொண்டார்.

இந்துக் கல்லூரியிலேயே கற்று கற்பித்து பிரதி அதிபராகவும் அதிபராவும் கல்லூரி அன்னையின் விழுமியம் தவறாது அடியொற்றி நிர்வாகத்தை நடத்திச் சென்றவர். இரசாயனம் கற்பித்தலில் புகழ்பூத்த ஆசிரியராக விளங்கிவர்.

கல்விப் பெறுபேறுகளும் சிறப்பாக அமைந்து வழமைபோல் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகினர்.

இவர் காலத்தில் 1989இல் தற்போதுள்ள இடத்தில் ஞான வைரவர் ஆலயம் அமைக்கப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றது சிறப்பம்சமாகும்.

திரு. K.S குகதாசன் அவர்கள் 1990-91 காலப்பகுதியில் சிறிது காலம் அதிபராகக் கடமையாற்றினார்.

இவர் காலத்தில் இவர் காலத்தில் A/L வகுப்புக்கள் குமாரசாமி மண்டப வளாகத்துக்கு இடமாற்றப்பட்டன. எனக்கு உப அதிபர் நியமனம் வழங்கி A/L வகுப்புக்களுக்கு மேற்பார்வையாளர் ஆக்கினார்.

1992 இல் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்ட திரு. A. பஞ்சலிங்கம் அவர்கள் கல்லூரியின் எதிர்கால முன்னேற்றத்திற்காக துர நோக்குடன் பல செயற்றிட்டங்களை வகுத்துச் செயற்பட்டார்.

கல்லூரிச் சமூகத்துடனும் கல்விசார் அதிகாரிகளுடனும் நற்தொடர்பினைப் பேணி நிர்வாக இயந்திரத்தை இலகுவாக இயங்க வைத்தார்.

காலத்திற்கும் சூழ்நிலைக்குமேற்ப மதிநுட்பத்தை கையாண்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் வல்லவர்.

இவரது வார்த்தைகளை மாணவர்களும் ஆசிரியர்களும் வேதவாக்காகக் கொள்ளத் தக்க வகையில் ஆளுமையையைப் பெற்றிருந்தார்.

உயர்தர மாணவர்களுக்காகப் புதிய நூலகம் ஒன்றை அமைத்து மாணவர்களின் தேடலை ஊக்கப்படுத்தினார்.

போரக்கால சூழ்நிலையில் மாணவர்கள் குப்பி விளக்கில் படித்துச் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றனர்.

1994 உயர்தரப் பரீட்சையில் பௌதிக விஞ்ஞானப்பிரிவில்



65.94 வீதமும், உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 70.63 வீதமும், வர்த்தகப் பிரிவில் 96.4 வீதமும், கலைப்பிரிவில் 66.67 வீதமும் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றதுடன் 121 மாணவர்கள் பல்வேறு துறைகளுக்கு அனுமதி பெற்றுச் சாதனை படைத்தனர். இப்பரீட்சையில் சு. மகேஸ்வரன், இ. குமரேஷ், சி. சிவப்பிரியன், வெ. சுதர்சன் ஆகியோர் 4 பாடங்களிலும் A சித்தி பெற்றனர்.

ஸ்ரீபிரசாந்தன் 315 புள்ளிகளைப் பெற்று கலைப்பிரிவில் யாழ் மாவட்டத்தில் முதலிடத்தையும், சி. சிவப்பிரியன் 330 புள்ளிளைப் பெற்று உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் யாழ் மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றனர்.

இவர் காலத்தில் 1995 உயர்தரப் பாடசாலையில் 40 மாணவர்கள் பொறியியல் துறைக்கும் 20 மாணவர்கள் மருத்துவத் துறைக்கும் அனுமதி பெற்ற சாதனை இற்றைவரை முறியடிக்கப்படாமல் உள்ளது.

1997 இல் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்ட திரு. அ. சிறிக்குமரன் அவர்கள் தூய்மையும் எளிமையும் நேர்மையும் மிக்க கண்ணியவானாக விளங்கியவர். அவரது எதிரிகளாலும் கைசுத்தமானவர் என்று பாராட்டப்பட்டவர்.

போர்க்காலச் சூழலாலும் மற்றும் கெடுபிடிகளாலும் நலிந்து நொந்திருந்த நிர்வாகக் கட்டமைப்புக்கு மத்தியிலும் கல்விச்சாதனைகளில் தொடர்ந்து வெற்றியீட்டியவர்.

1999 உயர்தரப் பரீட்சையில் அ. இளங்குமரனும், 2005 உயர்தரப் பரீட்சையில் சி. மயூரனும் கணிதப்பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றதுடன் 2001 உயர்தரப் பரீட்சையில் 22 மாணவர்கள் 3A பெற்றுச் சாதனை படைத்தனர்.

1991 முதல் 2008 வரை நான் உயர்தர வகுப்புக்களுக்குப் பொறுப்பான உப அதிபர், பிரதி அதிபர், ஆக கடமையாற்றியதுடன் கற்பித்தல் பணிகளையும் மேற்கொண்டேன். சி. மயூரன் எனது மாணவன் என்பதுடன் எனது காலத்தில் பெற்ற இச்சாதனைகளையிட்டு நான் பெருமிதமடைகிறேன்.

2005ஆம் ஆண்டு முதல் அதிபராகக் கடமையாற்றிய திரு. வீ. கணேசராசா அவர்கள் தற்றுணிவுடன் போர்க்காலச் சூழ்நிலையிலும் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் கல்லூரி நிர்வாகத்தைப் பொறுப்பேற்றார். அரைகுறையாக இருந்த கட்டடங்களுடன் புதிய கட்டடங்களை அமைப்பதற்கும் அடிகோலியவர்.

போர் உக்கிரமடைந்த அக்காலகட்டத்தில் கல்லூரியை சுமுகமாக இயங்க வைக்க அதிபரும் நானும் மிகவும் கஷ்டப்பட்டோம்.

பல்வேறு பிரிவினராலும் பல பிரச்சினைகளுக்கு நாம் முகங்கொடுக்க நேரிட்டது.

2007இல் பிரச்சினை உச்சக்கட்டமாக இருந்த காலத்தில் ஒரு தவணை முழுவதும் நான் பதில் அதிபராகக் கடமையாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

2008 செப்ரெம்பரில் இந்துவில் 35 வருட சேவையின் பின் எனது 60 ஆவது வயதில் நான் ஓய்வு பெற்றேன்.

கல்லூரி நிர்வாகத்திலும் பழைய மாணவர் சங்கத்திலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திலும் பல பொறுப்புக்களை ஏற்றுச் செயற்பட்ட நான் இந்து அன்னையுடன் ஒன்றிப் போய் விட்டேன். கல்வி உலகுக்கு, சமூகத்துக்கு என்னைப் பிரபலப்படுத்திய இந்துக் கல்லூரி என்றும் என் நினைவில் இருக்கும்.

எனக்கு தனித்தனியே பிரியாவிடை வைபவம் வைத்து வழி அனுப்பிய மாணவர்கள், உயர்தர விஞ்ஞானப் பிரிவு ஆசிரியர்கள், ஆசிரியர் கழகம், பழைய மாணவர்சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பல அமைப்புகள் இணைந்த என் மணிவிழாக் குழு ஆகிய ஆறு அமைப்பினருக்கும் எனது நன்றிகளை நான் இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி

**பொ. ம. மகேஸ்வரன்**
ஓய்வு நிலை பிரதி அதிபர்
யாழ் இந்துக் கல்லூரி.



# நெஞ்சம் நிறைந்த நினைவுகள்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 1994ம் வருட உயர்தர வகுப்பில் கற்ற மாணவர்களின் 'மீண்டும் பள்ளிக்கு சர்வதேச சந்திப்பு' என்னும் நிகழ்வை நடாத்த இருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன்.

அவ்வேளையில் என் நினைவிகள் பின்நோக்கி நான் அங்கு கற்பித்த காலங்களில் பதிந்தன.

1987இல் ஆசிரிய சேவையில் இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் என் சேவையைத் தொடர்ந்து ஆரம்ப காலத்திலிருந்து 2013 வரை அங்கு கற்பிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஏறத்தாழ 26 வருடங்கள் தாவரவியலையும், உயிரியலையும் கற்பித்த காலத்தின் நிறைவான அனுபவங்களை நினைத்துப் பார்க்கின்றேன்.

கல்வி, விளையாட்டு, ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்கிய பல மாணவர்களைக் கண்டு மகிழ்ந்த நாட்கள் அவை. 1994ம் வருட உயர்தர வகுப்புக்களை இன்று நினைத்துப் பார்க்கின்றேன்.

திரு. பஞ்சலிங்கம் அதிபர் அவர்களின் வழிகாட்டலில் ஆசிரியர்கள் எல்லோரும் ஒரு குடும்பம் போல ஒற்றுமையாகச் செயற்பட்டமை நினைவுக்கு வருகின்றது.

சீரற்ற நாட்டு நிலைமைகளில் கூட கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டு நடைபெற்றன. 1990, 1991 காலப்பகுதிகளில் ஆசிரியர்கள் சுயவிருப்பத்தில் ஓய்வு பெற்றமை, நாட்டுப் பிரச்சினை காரணமாக இடமாற்றம் பெற்றமை ஆகியவற்றினால் ஏற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை 1992, 1993 காலப்பகுதியில் அதிபரின் முயற்சியினால் தீர்த்து வைக்கப்பட்டது.

உயர்தர விஞ்ஞான வகுப்புக்கள் குமாரசாமி மண்டப வளாகத்தில் நடைபெற்றன. திரு. பொ. மகேஸ்வரன் அக்காலப் பகுதியில் இவ்வகுப்புக்களின் பகுதித் தலைவராகப் பொறுப்பேற்றுச் சிறப்பாகச் செயற்பட்டார்.

விஞ்ஞான வகுப்புக்களுக்கான ஆய்வுகூடங்களும் கூடுதலாக குமாரசுவாமி மண்டப வளாகத்திலேயே அமைந்திருந்தமை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை இலகுவாக்கியது.

என்னிடம் கற்ற 1994 உயிரியற் பிரிவு மாணவர்கள் பலர் பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு கற்கைகளுக்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏனைய பிரிவுகளிலும் அதிக எண்ணிக்கையான இவ்வருட மாணவர்கள் 1994, 1995 உயர்தரப் பரீட்சைகளில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகினர். இம் மாணவர்களில் பலர் இன்று இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தத்தம் துறையில் சிறந்து விளங்குவதை அறிகின்றேன்.
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் சத்திர சிகிச்சை சிறப்புக் கல்வியை மேற்கொண்ட வைத்தியக் கலாநிதி வெ. சுதர்சன், கலைத்துறையில் சிறப்புப்பட்டங்களைப் பெற்றுக் கம்பன் கழகத்தின் சிறந்த பேச்சாளராக விளங்கும் திரு. ஸ்ரீபிரசாந்தன் ஆகியோர் 1994 உயர்தர மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களை விட எத்தனைபேர் பொறியியலாளர்கள், மருத்துவர்கள், ஏனைய துறையினர்கள் தமது துறைகளில் சிறந்து விளங்குகின்றனர்.

இவ்வாறான சிறந்த பழைய மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வு ம் 'கல்லூரிச் சாலை' மலர் வெளியீடும் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**திருமதி. ச. சுரேந்திரன்**
முன்னாள் உப அபதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எனது நினைவுப் பதிவுகள்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எனது நினைவுப் பதிவுகள் வெளிமாவட்ட ஆசிரியர் சேவையும் பயிற்சிக் கல்லூரிப் படிப்பும் முடிவடைந்ததும், 1988ம் ஆண்டு தை மாதம் முதல் யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் எனக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்தது.

அது அப்பாடசாலையில் தரம் ஒன்பது வரை நடைபெற்ற காலப்பகுதியாக இருந்தது.

அங்கு விஞ்ஞான பாட ஆசிரியர் இல்லாததனால் எனக்கு அங்கு நியமனம் கிடைத்தது.

அங்கு போதிய வளங்கள் இல்லாவிட்டாலும், கிடைத்த வளங்களைக் கொண்டு மாணவர்களுக்கு சிறந்த பரிசோதனை முறைகளை அறிமுகம் செய்ததனால் அப்போதைய அதிபர் திருவாளர் திருஞானசம்பந்தப்பிள்ளையினாலும் மாணவர்களாலும் நன்கு மதிக்கப்பட்டேன்.

அதிபர் எனது செயல் திறனைப் பார்த்து காலைப்பிரார்த்தனையில் நற்சிந்தனை ஆற்றுவதற்கு அடிக்கடி அழைப்பார்.

ஒருநாள் கடைசிப் பாடவேளை மாணவர்களை உடற்பயிற்சிக்காக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு கூட்டிச் சென்றேன். அங்குள்ள அரச மரநிழலில் பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை உளவியல் போதனாசிரியர் திருவாளர் சண்முகலிங்கம், தனது மகனை இந்துக் கல்லூரியில் இருந்து வீட்டிற்கு கூட்டிச் செல்ல காத்திருந்தார்.

அவர் அப்போது என்னைக் கண்டதும் கூப்பிட்டு நீர் ஏன் இந்த ஆரம்பப் பாடசாலையில் கற்பிக்கின்றீர்?

இங்கு இந்துக்கல்லூரியில் எனது (தனது) மகனின் வகுப்பிற்குக் கூட ஒரு தகுந்த விஞ்ஞானபாட ஆசிரியர் இல்லை. இங்கு (யாழ் இந்து) கற்பிக்க உமக்கு விருப்பமா?' எனக் கேட்டார்.

நான் சம்மதம் என்றதும் அவர் இந்துக்கல்லூரி அதிபரிடம் நேரடியாகச் சென்று எனது விபரத்தைக் கூறினார்.

இரண்டு நாட்களின் பின்பு இந்துக் கல்லூரியின் அப்போதைய அதிபர் திரு. பொன்னம்பலம் என்னை நேரடியாக அழைத்து, இந்துக் கல்லூரியில் உமக்கு கற்பிக்க சம்மதமா? மாணவர்கள் மிகவும் திறமையானவர்கள் உம்மால் கற்பிக்க இயலுமா?' என்று கேட்டார்.

நான் சம்மதம் தெரிவித்ததும் அப்போதைய பிரதி அதிபர்கள் திரு. சோமசுந்தரம், திரு. மகேந்திரன் என்பவர்களுக்கும் என்னை அறிமுகம் செய்தார். திரு. மகேந்திரன் என்னைப் பார்த்து, "உமது தோற்றம் நன்றாக இருக்கிறது. செய்வீர் எனக் கருதுகின்றேன்." எனக்கூறி எனக்கு கைகொடுத்தார்.

அன்றைய காலப்பகுதியில் இந்துக் கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெறுவது மிகவும் கடினம். அப்படிக் கிடைத்தாலும் சமாளிக்கமுடியாமல் எத்தனையோ ஆசிரியர்கள் விலகிச் சென்றுள்ளதனையும் பின்பு அறிந்தேன்.

மூன்று நாட்களின் பின்பு கல்வித்திணைக்களத்தில் இருந்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் எனது நியமனம் தொடர்பான கடிதம் கிடைத்தது. 15.08.1988 முதல் நியமிக்கப்பட்டதாக கடிதத்தில் இருந்தது.

அக் கடிதத்தை பார்த்த ஆரம்பப் பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் அன்றைய தினம் நல்ல நாள் என்று உடனே சென்று கடமையைப் பொறுப்பேற்கும் படி கூறினார்கள்.

அன்று புதன்கிழமை நான் சென்று கடமையை பொறுப்பேற்றேன். அன்றைய தினம் என்னால் மறக்கமுடியாத தினமாகும். எனது வாழ்வின் திருப்பு முனையாகவும்

சுபீட்சமாகவும் இருப்பதற்கு இந்துக்கல்லூரி தான் காரணம் என்பதனை நான் இப்போதும் உணருகின்றேன். முதலில் எனக்கு தரம் 6,7,8 ற்கும் 'சுகாதாரமும் உடற்கல்வியும்' எனும் பாடமும், இன்னொரு வகுப்பிற்கு மட்டும் விஞ்ஞான பாடமும் கற்பிக்க தந்தார்கள்.

விஞ்ஞான ஆய்வுகூடம் துசு படிந்து பிரார்த்தனை மண்டப நுழைவாயிலின் பக்கத்தின் சிறிய ஒரு அறையில் அமைந்து இருந்தது. அங்குள்ள விஞ்ஞான பாட ஆசிரியர்களிடம் ஆய்வுகூடம் பற்றிக் கேட்டபோது அதற்கு ஒருவரும் பொறுப்பு இல்லை என்றும் தேவையெனில் உபகரணங்களை வகுப்பில் எடுத்து பரிசோதனை செய்வதாக கூறினார்கள்.

மறுநாள் நான் அதிபரிடம் அவ்வறையை நான் பொறுப்பேற்பதாக கூறினேன். அவரும் சம்மதம் தந்தார்.

எனது வகுப்பு மாணவர்களை கூட்டிச் சென்று அறையைத் துப்பரவு செய்து, எனது பாடநேரத்தில் மாணவர்களை அங்கு கூட்டிச் சென்று பாடம் நடத்தியதனால் அவ்வறை சரஸ்வதி கடாட்சம் பெற்றது. நான் சரஸ்வதி படம் ஒன்றை அங்கு வைத்து வணங்கியது எனக்கு நினைவில் உள்ளது.

அடுத்த கல்வி ஆண்டு 1989ம் ஆண்டு ஆரம்பத்தில் எல்லா ஆசிரியர்களுக்கும் நேரசூசி வழங்கப்பட்டது.

அதில் என்னை 9ம் ஆண்டு A பிரிவிற்கு வகுப்பாசிரியராகவும் விஞ்ஞான பாட ஆசிரியராகவும் நியமித்திருந்தார்கள்.

அவ்வகுப்பு தான் தற்போதைய 94ம் ஆண்டு பிரிவாகும். எனது வகுப்பில் உள்ள மாணவர்கள் எல்லோரும் ஏனைய 6 பிரிவுகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட திறமையான மாணவர்கள்.

அன்று இடைவேளையின் போது அதிபர் என்னை அழைத்து, உமக்கு ஒரு திறமையான வகுப்பு தந்திருக்கின்றேன் - அவர்களை கவனமாகப் பார்த்துக் கொள்ளும் - ஏனைய ஆசிரியர்கள் இருந்தும் ஒரு நம்பிக்கையில் உமக்கு தந்திருக்கின்றேன் என்றார்.

அதிபரின் நம்பிக்கைக்காக நான் பின்வரும் விடயங்களில் கூடிய கவனம் செலுத்தினேன். முதலாவது வகுப்புகளிற்கு தகுந்த ஆயத்தத்துடன் செல்வது, இரண்டாவது நேரம் தவறாவது வகுப்பிற்கு செல்லுதல், மூன்றாவது விடுமுறை எடுக்காமை.

மாணவர்களிடம் நான் கூறிய விடயம்.. முதலாவது கல்வி - இரண்டாவது ஒழுக்கம் - மூன்றாவது வீட்டு விசேடம் தவிர ஏனைய எந்த கருமத்திற்கும் விடுமுறை எடுக்கக் கூடாது என்பனவாகும். எனது இக் கட்டளைக்கு மாணவர்கள் நன்கு செயற்பட்டனர். எனது வகுப்பு நன்றாகச் செயற்பட்டது.

எனது வகுப்பறை காரியாலயத்திற்கு அருகில் வீதி ஓரமாக இருந்த விறாந்தையில் முதலாவது அறை. எனது மாணவர்கள் எல்லோரும் முத்துக்கள். ஒருமுறை ஒரு சுற்றுலா பயணம் கூட்டிச் சென்றேன்.

அன்று காலை அனேகமாக பெற்றோர்கள் வந்து தமது பிள்ளைகளை எனது கையில் ஒப்படைத்து கவனமாக கூட்டிச் செல்லும்படி கூறினார்கள்.

அதில் திரு சண்முகலிங்கம் (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) மகனும் ஒருவர் ஆவார். ஒரு மாணவரும் குறையில்லை. அதில் ஒரு சில மாணவர்களைப் பற்றி கூறத்தான் வேண்டும்.

முதலாவது குணரத்தினம் பார்த்தீபன் சாரணர் விளையாட்டுத் துறையில் கூடுதல் ஈடுபாடு இதனால் சிலவேளை தண்டனையும் பெற்றுள்ளான். GCE (O/L) இல் சிறந்த பெறுபேறு ஆனால் GCE (A/L) இல் முதல் தரத்தில் பல்கலைக்கழகம் செல்ல புள்ளி காணாது.

நான் கூப்பிட்டு ஏசியபோது நான் கட்டாயம் இரண்டாம் முறை பல்கலைக்கழகம் புகுவேன் என்று கூறினான் அதன் படி நல்ல பெறுபேறு பெற்று பல்கலைக்கழகம் சென்று பல சோதனைகள் தாண்டி சிறப்பாக இருக்கின்றார்.

பிரசாந்தன், ஜெயநிதி என்ற இரண்டு மாணவர்கள் கம்பன் கழகத்தில் இணைந்து இரவு அனேகமாக பட்டிமன்றத்திற்குச் சென்று விடுவார்கள். பகலில் என்னிடம் மன்னிப்புக் கேட்டபார்கள். தாங்கள் படிப்போம் என்று கூறினார்கள்.

நான் அவர்களில் அதிக நம்பிக்கை வைக்கவில்லை. ஆனால் அவர்கள் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை எடுத்து பல்கலைக்கழகம் சென்று, இன்று பிரசாந்தன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் ஜெயநிதி சிறந்த சட்டத்தரணியாகவும் இருப்பதாக அறிந்தேன்.

ஜெயநிதியை மீண்டும் சந்திக்கவில்லை.

சிவபாதமூர்த்தி வகுப்பில் துளி நாட்டம் காட்டாத போதும், இன்று அவரை ஒரு சிறந்த மருத்துவராக காண்கின்றேன். சுதர்சன் சிறந்த சத்திர சிகிச்சை மருத்துவர். சிவப்பிரியன் சிறந்த மருத்துவராக இருப்பதாக (சந்திக்கவில்லை) கேள்விப்பட்டேன்.

ஒரு மாணவன் அடிக்கடி என்னிடம் வருவான். சேர் மறுமுறை நான் உங்களை சந்திக்கின்றேனோ தெரியாது என்பான். காரணம் அவனது நிலை அப்படி. பின்பு அவர் சிங்கப்பூரில் வசிப்பதாக கேள்விப்பட்டேன். இப்பிரிவு மாணவர்களில் 30 மாணவர்கள் அதிவிசேட D தரத்திலும் 3


CANTEEN

மாணவர்கள் C தரத்திலும் விஞ்ஞான பாடத்தில் சித்தி பெற்றார்கள். முழு மாணவர்களும் எனது வீடு தேடி வந்து ரொபி பிஸ்கட் தந்தார்கள்.

அது இன்றும் எனது மனதில் உள்ளது. எனது மனைவி அடுத்தடுத்து வருட O/L பெறுபேறுகள் வரும் போது நீங்கள் O/L படிப்பிப்பது இல்லையா என்று பகிடியாக கேட்பார். அப்படியான சிறந்த மாணவர்கள் தான் இந்த 94ம் ஆண்டு பிரிவு மாணவர்கள் என்பதில் நான் பெருமை கொள்கின்றேன்.

அதன் பின்பு எத்தனையோ மாணவர்களை கற்பித்திருக்கின்றேன்.

அவர்கள் எல்லோரும் நல்ல நிலையில் உள்ளார்கள். ஆஸ்பத்திரி, வங்கி, பாடசாலை, கச்சேரி என எங்கு நான் சென்றாலும் எனது மாணவர்கள் எழுந்து வந்து எனக்கு உதவிகள் செய்து தருவார்கள். இது இந்துக் கல்லூரி எனக்குத் தந்த ஒரு பெருஞ் சிறப்பாகும்.

பாடசாலை சம்பந்தமான விடயங்களில் முதலாவதாக திருவாளர் பொன்னம்பலத்தை மாற்றுவதற்காக ஒரு பிரிவினர் முயற்சி செய்த போது நான் மாற்ற வேண்டாம் என ஆசிரிய கழகத்தில் ஒரு பிரேரணையை முன்வைத்த போது பெரும் எதிர்ப்பை சம்பாதித்தேன்.

அப்போதைய கல்விப் பணிப்பாளர் எதிராளியின் சொல்லைக் கேட்டு என்னை மாற்றுவதற்கு முயற்சி செய்தார். நான் நேரடியாக சென்று வாதிட்டதில் எனது மாற்றம் ரத்து செய்யப்பட்டது.


90ம் ஆண்டு கடைசிப் பகுதியில் எனக்கு மாணவர்களுக்கு அடையாள அட்டை பெற்றுக் கொடுக்கும் பணி தரப்பட்டது.

அதில் பல சிக்கல்கள் வந்தபோதும் கச்சேரியில் சென்று சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்து சிறப்பாக செய்து கொடுத்தேன். அப்பணியை 2009ம் ஆண்டு வரை செய்து வந்தேன்.

91ம் ஆண்டு முற்பகுதியில் எனக்கு விஞ்ஞான பாட இணைப்பாளராகவும் சுகாதாரக் கல்வி பாட இணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டேன். அதில் மூத்த விஞ்ஞான ஆசிரியர்களில் ஒருவர் என்மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

அவை ஆதாரமற்றவை என நிரூபணமானதில் தோல்வி கண்டார். அப்பொறுப்பையும் ஓய்வு பெறும் வரை சிறப்பாக நடத்தினேன்.

கோட்ட மட்ட,



வலயமட்ட, மாகாணமட்ட, தேசிய மட்ட விஞ்ஞான போட்டிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்து எடுத்துப் போட்டியில் கலந்து கொள்ளச் செய்தேன். எமது மாணவர்கள் முதல் மூன்று இடங்களையும் அனேகமாக பெற்றுக் கொள்வார்கள்.

இதனால் சென்ற இடத்தில் நான் கௌரவிக்கப்பட்டேன்.

இதனால் எமது பாடசாலையின் புகழ் மேலும் உயர்ந்து நின்றது. பரியோவான் முதலுதவிப் படை பொறுப்பாசிரியராக கடமையாற்றிய போது எமது மாணவர் குழு வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று பாசறையில் கலந்து கொண்டது.


1996ம் ஆண்டு காலப்பகுதியில் நான் ஆசிரியர் கழகத் தலைவராக தெரிவு செய்யப்பட்டு, ஆசிரிய மாணவர் பிரச்சினை, ஆசிரியர் ஆசிரியர் பிரச்சினைகள் ஏற்பட்ட போது சாதுர்யமாக அவற்றை தீர்த்து வைத்துள்ளேன்.

ஒருமுறை இரண்டு ஆசிரியர்களுக்கு இடையில் கைகலப்பு ஏற்பட்டு விசாரணை என்ற ரீதியில் கல்விக்கந்தோருக்கு அழைக்கப்படும் நிலையில் இருவருடனும் கதைத்து சமாதானமாக்கி அப்போதைய கல்விப்பணிப்பாளர் திரு. இரத்தினராசாவுடன் நேரடியாக கதைத்துத் தீர்த்து வைத்தேன்.

பல வருடங்களாக சிக்கனக் கூட்டுறவுக் கடனுதவி சங்கம் பாடசாலையில் இயங்கி வந்தது. அதில் தலைவராக அதிபரே இருப்பது வழக்கம். ஆசிரியர்கள் தேவை கருதி கடன் கொடுத்து மீள பெறுவது வழக்கம்.

திரு. குகதாசன் அதிபராக இருந்த காலத்தில் என்னைக் கூப்பிட்டு நீர் நம்பிக்கைக்குரிய ஆசிரியராக இருப்பதனால் இன்று முதல் நீரே தலைவராக இருக்க வேண்டும் எனக் கூட்டத்தில் கூறி அறிமுகப்படுத்தினார்.

நானும் எனக்கு வழங்கப்பட்ட கௌரவமாக அதனை ஏற்று நடாத்தி வந்தேன். அடுத்த வருடத் தேர்தலின் போது செயலாளராக ஒரு கணித ஆசிரியர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



அவர் பாடசாலை கன்ரீனை சி. கூ. சங்கம் பொறுப்பேற்று நடாத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்து அப்போதைய அதிபர் திரு. அ. சிறீக்குமரனின் உதவியுடன் அப்போது கன்ரீன் நடாத்தியவரை இடைநிறுத்தி சி. கூ. சங்கத்தை பொறுப்பேற்க வைத்தார்.


பின் அது நட்டமடைந்து அங்கத்தவர் பணம் கட்டவே நெருக்கடியாக இருந்தது. அப்படி இருந்தும் கூட்ட அமர்வுக்கான கட்டணத்தை அவர் பெற்றுக் கொண்டார்.

இச்செயற்பாட்டிற்கு அப்போதைய தனாதிகாரியின் சொல்லைக் கேட்டு நான் செயலாளரை கண்டித்து அவரை இடைநிறுத்தாது விட்டது மிகப் பெரும் தவறு.

அவ் ஆசிரியர் இடமாற்றம் பெற்றுச் சென்றதன் பின் கன்ரீனை மீண்டும் தனியாருக்கு கேள்வி மூலம் கொடுத்து அந்நட்டத்தை ஈடுசெய்து மீண்டும் நல்லமுறையில் இயங்கச் செய்து மீள ஒப்படைத்தேன்.

1990ம் ஆண்டு முதல் சபாபதி இல்லப் பொறுப்பாசிரியராக இருந்து மாணவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சியுடன் நல்லொழுக்கத்தையும் கற்பித்து பாடசாலையின் புகழ் ஓங்கச் செய்துள்ளேன்.

திரு அ. சிறீக்குமரன் அதிபராக இருந்த காலத்தில் பழைய O/L இரசாயன ஆய்வுகூடம் இடம் மாறியதனால் அக்கட்டிடத்தை பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கல்வித்திணைக்களம், மாணவர்கள் பங்களிப்புடன் நவீனமயமாக்கி தற்போதைய தரத்திற்கு ஏற்ப ஆய்வுகூடமாக மாற்றி அமைத்துள்ளேன். இது எனது காலத்தில் நடைபெற்ற ஒரு சிறப்பான நிகழ்வாகும்.



நான் ஒழுக்கக் கட்டுப்பாட்டு ஆசிரியராக இருந்த காலத்தில், பிரார்த்தனை மண்டப ஆயத்த ஒழுங்கை நானே செய்து வந்தேன். ஒவ்வொரு நாட் காலையிலும் இரண்டு மாணவ முதல்வர்கள் ஒழுங்கு செய்வார்கள்.

நான் மேற்பார்வை செய்வேன். ஒரு நாள் காலை நான் போகும் போது மாணவர்கள் உரத்து கதைத்து ஓடித்திரிந்தார்கள்.

எனக்கு கோபம் வந்து விட்டது. பொறுப்பான மாணவத் தலைவரை கூப்பிட்டபோது 94ம் பிரிவு ஜெயநிதி தான் முன்னே வந்தார். உடனே நான் ஓங்கி கன்னத்தில் அடித்துவிட்டேன்.

மண்டபம் ஒழுங்காகி பிரார்த்தனை முடிவடைந்தது.

மாணவன் கன்னம் சிவத்து வீங்கி விட்டது என்று பிறகு அறிந்தேன். உடனே கூப்பிட்டு நான் ஆறுதல் சொல்லவில்லை. அந்நிகழ்வு இன்றும் எனது மனதை அழுத்திய வண்ணமே உள்ளது. இதுவே என் ஆசிரிய வாழ்வில் மறக்கமுடியாத சந்தர்ப்பம்.

நேரடியாகக் கண்டால் இன்றும் நான் மன்னிப்புக் கேட்பேன். அல்லது இத்தகவலை என்சார்பில் உடன் கல்வி கற்கும் மாணவர்கள் அவருக்கு அறிவிக்கவும். இதுவே நான் உங்களிடம் கேட்கும் உதவி.

அதிபர் அ.சிறீக்குமரன் ஒரு ஆசிரியரை வகுப்பு செல்வது குறைவு என்றறிந்து மாற்றுவதற்கு முயற்சி செய்தார். அதனால் கோபமடைந்த அவ் ஆசிரியர் சில மாணவர்களை திரட்டி பாடசாலை பகிஸ்கரிப்பில் ஈடுபடச்செய்தார் அதுவே நான் அறிந்த முதலாவது பகிஸ்கரிப்பாகும்.

இப்போதும் சில சுயநலம் படைத்தவர்கள் மாணவர்களை தவறான வழியில்

வழிநடத்துவதனால் பல பிரச்சினைகள் உருவாகி உள்ளன. இதனால் பாடசாலையின் நன்மதிப்பு பலராலும் தவறாக விமர்சிக்கப்படுவதனை பற்றி அவர்கள் சிறிதளவும் சிந்திப்பது இல்லை. தற்போதைய அதிபரை ஒருமுறை சந்தித்து இப்பாடசாலையில் உள்ள சில நல்ல தீய செயற்பாடுகளை மேலோட்டமாக கூறினேன்.

அவர் அதனை மதிப்புடன் ஏற்றுக்கொண்டு நல்லதையே செய்வேன். இதில் யாரையும் முகமன் செய்யமாட்டேன் என்று கூறினார். அவர் சிறப்பாக நடத்துவதற்கு பழைய மாணவர்கள் நீங்களே கரம் கொடுக்க வேண்டும்.

ஒரு நல்ல ஆசிரியர் மாணவர்களை தவறான வழிமுறைகளில் ஈடுபடச் செய்யக்கூடாது. நான் அன்று முதல் இன்று வரை கற்பித்த காலத்தில் எந்த மாணவரையாவது தவறான வழியில் செல்ல தூண்டியது இல்லை. இன்று எல்லா மாணவர்களும் என்னை மதிப்பதற்கு இதுவே காரணம். இதனை நீங்களும் அறிவீர்கள்.

மாணவர்களை நான் எனது பிள்ளைகள் போன்றே வழிநடத்தினேன்.

"பிறர் பிள்ளையின் தலை தடவினால் தன்பிள்ளை தானாகவே வளரும்" என்ற பழமொழியை தாரக மந்திரமாக கொண்டேன். இன்று எனது பிள்ளைகள் படித்து பட்டம் மேல் பட்டம் பெற்று நன்றாக இருக்கின்றார்கள்.

மூத்த மகனின் மூன்றாம் நிலைப் பட்டமளிப்பு விழாவிற்கு அண்மையில் லண்டன் சென்றேன். அங்கு பல மாணவர்களை சந்தித்தேன்.

அவர்கள் வழங்கிய இராப்போசன விருந்துபசாரங்களிலும் பங்குபற்றினேன். இது யாரால் கிடைத்தது? ... யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆற்றிய எனது நேர்மையான தன்னலமற்ற கற்பித்த தன்மையினால் கிடைத்தது.

நான் ஓய்வு பெறும் போது மாணவர்களாலும் ஆசிரிய கழகத்தாலும் தனித்தனியாக விழா எடுத்து கௌரவிக்கப்பட்டேன். இரண்டு பிரிவினரும் தனித்தனியாக J.H.C நாமம் பொறிக்கப்பட்ட மோதிரம் பரிசாகத் தந்தார்கள்.

அது எப்போதும் உங்கள் நினைவுகளையே எடுத்துக் கூறும்.

இதுவே எனக்கு பெரும் பேறு. தற்போது எனது ஆரம்ப மாணவர்களால் கௌரவிக்கப்படும் போது மேலும் நான் பெருமை அடைகின்றேன்.

இதுவே நான் உங்களுக்கு கூறும் நன்றி அறிதல்.

"வாழிய யாழ் இந்துக்கல்லூரி
வாழிய வாழியவே"

நன்றியுடன்

**இராசா பாலச்சந்திரன்**
ஓய்வு நிலை பகுதித்தலைவர்
(1988 முதல் 2009 ஆண்டு வரை)



பொருள்தேடும் பூமியில்
அருள்நாடும் எங்கள் அன்பு
நெஞ்சங்களே!

என்னையும் ஒரு பொருளாக நினைத்தமைக்கு யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் (1994ம் ஆண்டு மேற்றரப்பிரிவு) யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இம்மாதம் எனக்கு முக்கியம் நிறைந்தது. 75வது வயது பூரணமாகும் காலம்:

கல்லூரி தொடர்பான விடயம் தங்களுக்கு அருமருந்தாக அமையலாமென எண்ணி மிகவும் தேவையும் முக்கியமும் ஆனவற்றை மட்டும் குறிப்பிட முனைகிறேன்.

மாதா, பிதா, குரு,
தெய்வம் என்பதை யாவரும் அறிந்திருப்பீர்கள்.

"நான் கண்ட தெய்வங்கள்" என அவர்களை உணர்வதற்கு ஏற்ற பக்குவநிலையை நீவிர் யாவரும் அடைந்துள்ளீர்கள் என்று நினைந்து மனநிறைவு" முதல் நினைவாக எழுகின்றது. ஆசிரியர்கள் யாவரையும் முழுமையாக அறியும் வாய்ப்பு யாவருக்கும் கிட்ட வில்லைதான்.




# சிந்தனை நின்தனக்காக்கி...



ஒருவரையாகிலும் அறியக்கூடியதாக உதாரணம் தரக்கூடியதான சந்தர்ப்பம் நேர்ந்ததையிட்டு எங்கள் கல்லூரியில் கோவில்கொண்டு அருளாட்சி நல்கும் சிவஞான வைரவசுவாமியை நினைந்து நினைந்து மிகுதியைத் தொடர்கிறேன்.

எங்கள் ஆசிரியர்கள் ஓய்வு அறையில் என்னுடன் முன்னைய அமரரான சைவ தமிழ் ஆசிரியரான திருவாளர் குமாரசிங்கம் அவர்கள் இருந்தவேளை ஒரு அதிசயம் நிகழ்ந்தது.



அமைதியாக இருந்தவர் என்பக்கம் திரும்பி இளநகையுடன் எனது மகன் K.K.S. வீதிப்பக்க கல்லூரிவாயில் வழியில் போய்க்கொண்டிருக்கிறார்" என்றார்.

யான் எதிர்பார்க்கவில்லை. நேரத்தை மட்டும் கவனித்துக் கொண்டேன். வீடு சென்ற பின் நண்பர் கூறியவை "உண்மை" என அறிந்தேன். அவரின் ஆற்றலை யான் அறிந்திருக்க வில்லை.

"மனது அற்ற பரிசுத்த நிலையை" நினைத்திருக்கும் வேளைகளில் சூழலில் நடப்பவை தொடர்பான காட்சிகள் உள்ளுணர்வில் தெரியும் என்பதை முதல் முதலாக அறிந்தேன்.

இப்படியே மற்றையவர்களிலும் புதைந்துள்ள ஆற்றல்கள் மற்றவர்கள் அறியும் வாய்ப்புக்கள் அரிதுதான்.

திருவடிகளைத் தொட்டு வணங்கக்கூடிய தெய்வத் தன்மை மிளிர்ந்த ஆசிரியப் பெருந்தகைகளிடம் நீங்கள் கல்வி கற்ற பெருமைக்குரியவர்கள்.

எங்கள் பிரார்த்தனைக்கூடம் யாவருமறியாத மகத்துவம் மிக்கது.

ஆத்மீக உயர் நிலையிலுள்ள பெரியோர்களின் "திருவடிகள் தீண்டப்பெற்ற ஆத்மீக அலைகள், அதிர்வுகள் பதிந்துள்ள புண்ணிய பிரதேசம்".

கிழக்கிலிருந்து வந்த ஆத்மீக ஒளி" என சிலையின் கீழ்க்குறிப்பில் இன்றும் அமெரிக்காவில் "சிகாகோ" நகரத்தில் போற்றப்படும் வீரத்துறவி சுவாமி விவேகானந்தர், கத்தியின்றி ரத்தமின்றி "வெள்ளையனே வெளியேறு" என்று போராடி வெற்றிவாகை சூடிய மகாத்மா காந்தியடிகள், மற்றும் திருவருட் செல்வர்களான கிரிதாரி பிரசாத், சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் போன்றோர்களும் வருகை தந்து உரையாற்றிய பெருமைக்குரிய பிரதேசம் என்ற பெருமைக்குரியது "நாம் யாவரும் பிரார்த்தனை செய்து பயன்பெற்ற இடம்" என நினைக்கப் பெருமிதமாயுள்ளது.

இந்த வழியிலே தோன்றிய எம்மவர்கள் தான் சிறந்த பேச்சாளர்களான சிவமகாலிங்கம், ஜெயராஜ், சிவகுமார், பிரசாந்தன், புரந்தரன், பாலசண்முகன் என எங்கள் கல்லூரியின் புகழ்பூத்த மாணவர்கள் வரிசையில் கல்லூரியின் பெயரை வெளியுலகிற்குப் பிரபல்யமாக்கியவர்கள் என்றால் மிகையாகாது.

கற்றல், கற்பித்தல் தொடர்பான சில விடயங்களை, நாம் என்றும் நினைவில் பதித்திருக்கவேண்டிய நிலையில், சுவாமி விவேகானந்தர் தந்துள்ளார்.

பயிரின் வளர்ச்சிக்கு" தடையாயுள்ள "களைகளை" நீக்கிவிடுவது போன்றதே ஆசிரியர்களுடைய தொழிற்பாடு.

தாவரத்தின் இயற்கையான வளர்ச்சி போன்றதே ஒவ்வொரு மாணவனுடைய வளர்ச்சியுமாகும்.

தெய்வம்பற்றிய சிந்தனையில் "He is all; He is in all; He is the all in all" என மிக எளிதாகக் குறிப்பிட்டது மட்டுமல்ல.

"பலம்"பற்றிய செய்தியாக Thinking of strength is strength" என்றும் கூறிக்கொள் என்கின்றார், மகாத்மா அடிகள் "தெய்வம் உண்டென்றிரு" என்பதை உறுதிப்படுத்த எளிமையான விளக்கம் தந்துள்ளார்.

பேராபத்துக்களிலிருந்து எம்மைக் காப்பாற்றி, தெய்வம் தன் இருக்கையை "கடவுள் இருக்கிறார்" எனத் தெளிவாக்குகின்றது மட்டுமல்ல, "கடவுள் தரிசனம் என்பது சிந்தையில் கோவில்கொண்ட எம்பெருமானை நிச்சயமான பக்தி உணர்வோடு நாளிலும் பொழுதிலும் வழிபடுவதேயாகும்" என புதுமையாகக் கூறியுள்ளார்.

"தெய்வீகத்தை" உணர்ந்த எம்மாணவர்கள் வழிபட அருமையான சந்தர்ப்பம் எமக்கு

எம் திருக்கேதீஸ்வரத் திருவிழாவின்போது (பக்தோற்சவத் திருவிழா உபயம்) கிடைத்தது.

பாலாவியில் தீர்த்தமாடி, தீர்த்தக்காவடியுடனும், சிவபுராண கோசத்துடனும் மகாலிங்க அபிசேகம் செய்ய ஆயத்தமானவேளை நிகழ்ந்த நிகழ்வு இன்றும் பசுமையான நினைவாய் உள்ளது. கண்ணாடி இல்லாது நடமாட இயலாத கணேசன் சண்முகம் என்ற எங்கள் மாணவன் கண்ணாடியை குடத்துடன் பாலாவியின் அடியில் தொலைத்துவிட்டான்.

எல்லோரும் தெய்வ வேண்டுதல் செய்து தான் தேடினர்.

இரவீந்திரன் என்ற மாணவன், வெளியே நின்றவன், நீரில்பாய்ந்து சில நிமிடத்தில், எங்களுக்கு தெய்வத்தின் இருக்கையை வெளிப்படுத்த, கண்ணாடி மற்றும் குடத்துடன் வெளியே வந்தான். "அரோகரா" என்ற கோசம் ஓய சிறிது நேரமாயிற்று. இப்படி வேறு அற்புதங்களும் வழியே நிகழ்ந்ததை எம்மோடு பயணித்தவர்கள் அறிவார்கள். எமது கல்லூரியின் அமைவிடம் கோவிலுடன் ஒன்றிக் கலந்தது மட்டுமல்ல.

கண்ணுக்குப் புலப்படாத ஆத்மீகக் கதிர்வீச்சும்" நிறைந்த சூழ்நிலை " விரும்பியோ விரும்பாமலோ " பூரண சமயி" என யாரும் மாறிவிடுவார்கள்.

அணு உலைச் சூழலில் (Atomic Reactors) கதிர்வீச்சு கசிந்தது போன்றதே எமது சூழ்நிலை.

தவத்திரு சிவயோக சுவாமிகள் பிற மகான்களுடன் சங்கமிக்கும் தியானமண்டபம் அற்புதமான அருட்கதிர்களை பரப்பும் தகைமையது.




அந்த எல்லையிலுள்ள கல்லூரியும் ஆசிரியர்களும் கதிர்வீச்சுக்கு உட்படுவது தவிர்க்கவியலாத ஒன்று. உலகில் வேறு எந்தக் கல்லூரிக்குமில்லாத அருமை பெருமைமிக்க வாய்ப்பு உங்களுக்கு முற்பிறவிப் பயனால் கிடைத்துள்ளமை பற்றிச் சிந்தியுங்கள், தெளியுங்கள்.

செயற்பட்டு முன்னேறுங்கள். உங்கள் உடலில் புகுந்து உள்ளத்தில் தோய்ந்து ஆத்மாவில் ஊறியபின் தகுந்த காலம் வரும்போது பக்குவநிலைக்கு" ஏற்ப முளைகொண்டு வளர்ந்து ஞானப்பெரு விருட்சமாகத் திகழும்.

பிரார்த்தனைகூடப் பேச்சுக்களில் என்றும் உள்ளத்தில் நிலைப்பன என்ற வரிசையில் எனது பிரியாவிடையின் போது செல்வன் குமரேசன் புரந்தரன் கூறியவை என்றும் நினைவில் நீக்க முடியாதவையாய் உள்ளன.

அவையாவது "எவ்வுயிரும் எம்பெருமான் திருமுன்னிலையில் என நினை"


நாம் பிறவி எடுத்ததன் நோக்கம் இறைவனை வழிபடுவதற்கே. இவற்றுடன் நல்தவத்தவர் "உள்ளிருந்தோங்கும்" நமச்சிவாயத்தை நான் மறவேனே" என்பன. சமயகுரவர்கள் வாழ்ந்த காலத்திற்கும் அண்மையில் சிவயோக சுவாமிகள் வாழ்ந்த காலத்திற்கும் உள்ள இடைவெளியை சிந்தித்துப் பார்க்குமிடத்து திருமுறைகள் எல்லாம் தமிழ் வேத மந்திரங்கள்" என இன்று போற்றுதற்குரியதாய் அமைந்துள்ளன என்பதை யோகசுவாமிகளின் முன் நிகழ்ந்த நிகழ்ச்சி சான்று பகர்கின்றது.

ஏதிலியான குடும்பத்தவன் ஒருவன் தன் மனைவி, பிள்ளை வறுமையால் வாடுவதை யோக சுவாமிகளிடம் சொல்லி அழுதான்.

சுவாமி பொற்கிண்ணம் பெற்ற பதிகமான இடரினும் தளரினும்....." என்ற 10 பாடல்களைப் படிக்கச்செய்தார்.

பத்தாவது பாடலின்போது பணமுடிச்சுடனும் பொற்காசுடனும்" ஒரு வெளிநாட்டவர் வந்து சுவாமியின் முன் அவற்றை அர்ப்பாணித்தார். ஏழையின் ஏழ்மை நீங்கியது.

இன்றும் திருமுறைகள் உயிரூட்டம்



உடையனவாகத் திகழ்ந்த இந்த உதாரணம் கல்லூரியின் அருகிலுள்ள தியான மண்டபத்தில்தான் நிகழ்ந்தது. மறக்கமுடியாத வேறும் உள. மைதான நிகழ்ச்சிகளில் ஜவ்றுல்லா, தவேந்திரன், புவனேந்திரன் ஆகியவர்களின் விரைவான ஓட்டங்கள்.... எங்கே மறக்க இயலும்.

கரப்பந்தாட்டத்தில் மகாதேவன் முரளி (ஜேர்மனி) கந்தையா பஞ்சகுலசிங்கம் (அமெரிக்கா), அசாதாரண வல்லமைமிக்கவர்கள் என்பதால் அவர்கள் என் நினைவில் அழியவில்லை.

உதைபந்தாட்டத்தில், மிகத் தெளிவான திறமைகள் வெளிப்பட்ட நிலையில் ந. வித்தியாதரன், சண். தயாளன், வே. செல்வராசா, த. ரவீந்திரன், கண்ணாடி ரவீந்திரன், த. சிவகுமார், சி. ரூபானந்தசிவம் என்பார்கள் காலத்தால் மறைய இயலாதவர்கள்.

பலதரப்பட்ட விவேக ஈவு உடையவர்கள் எங்கள் மாணவர்கள். மிகத்திறமையானவர்களை வகுப்பறையில் எல்லோருடனும் சேர்த்துக் கற்பிப்பதில் உள்ள சிரமநிலை, திறமை மிக்க எமது கல்லூரி போன்றவற்றில் மிகமிகச் சிக்கலானது.

மிகுந்த உளவியல் அறிவு மற்றும் கற்பித்தல் அனுபவம்மிக்கவர்களுக்கும் அது ஒரு சோதனை.

ஒருமுறை, தவிர்க்கவியலாத சூழ்நிலையால் ஒரு மாணவன் என்னால் "கஸ்டமுற" நேர்ந்துவிட்டது.

எனது "விசேட கவனிப்பு" பயனுள்ளதாக மாறி இன்று கட்டிடப் பொறியியலாளராகக் கனடாவிலுள்ள அவர், அதே துறைசார்ந்த என் மருமகனுக்குப் பொருத்தமான தொழில் கிடைக்க முன்னின்று உதவினார்.

என்னால் ஏற்பட்ட பாதிப்பையும் புறந்தள்ளி எனக்கு உதவிசெய்து தனது குணஇயல்பை வெளிப்படுத்தினார்.

திருவள்ளுவர் கூறிய இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர்நாணநல்நயம் செய்துவிடல்" என்ற குறளுக்கு இலக்கியமானார்.

அந்தக் குறளிலுள்ள "விடல்" என்று சொன்னது, தனக்கு ஏற்பட்ட துன்பத்தையும் தான் செய்த நன்மையையும் மறந்து விடுவதே என்பதே.

எங்கள் அன்புச் செல்வங்கள் அனைவரும் பூரண ஆரோக்கியத்துடனும், நிறைவான மனமகிழ்ச்சியுடனும், சகல செல்வங்களும் பெற்று இனிதே வாழ எங்கள் ஆசிரியர்களின் சார்பாக உள்ளம்நிறைந்த ஆசிகளும், வாழ்த்துக்களும் தெரிவித்து, மீளவும் மிக்க நன்றி எனக்கூறி நிறைவுசெய்கிறேன்.

உலகம் எல்லாம் ஆத்மசக்தி ஓங்கவேண்டும். ஓம் சாந்தி நிலவ வேண்டும்!!!

**சி. சு. புண்ணியலிங்கம்**
யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்

# From the heart of the ex teacher Mr.T.Kangeshapillai

I have great pleasure and satisfaction in sending this message to the souvenir book 'கல்லூரிச் சாலை'..

Having served our nation as well as globally for over 100 years, Jaffna Hindu College (JHC) stands above other similar institutions in many respects even though it has been facing many obstacles after war situations in the Jaffna Peninsula.

The credibility of our great Jaffna Hindu College depends on its ability to produce efficient students such as engineers, doctors, business personalities, etc who would assume responsible and respectable positions with the capacity to guide the future generations globally.

In fact, the education system must provide students with an adequate degree of competence in the world of work and in the technological international environment of the 21st century.

In my view, our Jaffna Hindu College products behaved very well having the highest positions in our country as well as the globalization of world higher activities including science and technological activities.

In the period of 80s to 90s, I had been at the great Jaffna Hindu College as a mathematics teacher and when I taught in the GCE (A/L) maths classes the students were talented and had the highest appreciated values and disciplines while they were in the critical juncture and desperate situation such as economic sanctions to the Northern Province enforced in 90s. But, at present although the students of Jaffna Hindu College



have the all facilities than the past time they are not down in the achievement of national examinations and sometimes some gets the highest rank in the island wide, whereas the discipline of them is down totally, as not giving respects to their teachers and, other activities of rude ways like rowdysm. It is the major problem to the future of the JHC and whither discipline of students of JHC?

I am sorry to say that those who are concerned with education and the Tamil politicians too have no interest to take any action against it to find an alternative way to stop this rude ways of the students. However, I am always grateful to the old boys of JHC who went for good and have helped with having functions, launching magazines always about our JHC's reputation in the various countries of the world.

A sound education is indispensable to the well-being and future of the members of any society because they form the richest natural resource of a society.

The function of educating them rests with the state to a great extent.

The quality of education in teh country is determined to a very large extent by the quality of teachers. Such, the past teachers of JHC contributed their efforts to you and therefore you are having good lives. In fact JHC has produced many admirable personalities with great ability and distinction.

However, it is to our credit that with the limited resources available and with the constraints imposed by war and JHC has been able to deliver the goods because of the dedication of the staff and the specialists in the field whose services were fortunate to obtain.

Credit is due to the teachers and students who pulled their weight under trying conditions.

Actually, I was grown up by you and the great JHC, just I feel always the sweet memories with you when I was there.

Finally I can say that past JHC is not available while I was there than the present time.


"We are living in a fortunate period break up atom, break through the space exploration, but break down the morality"

I congratulate the members of the GCE (A/L) 1994 batch for their achievement in their lives and wish all the best to your get-together.

**Mr.T.Kangeshapillai**
Ex. Teacher of JHC
Rtd. Principal, Palay Teachers' college.



# A message from former teacher Mr.R.Raveendranathan



**Hello my past physics students of JHC1994,**

Hope, this message on your request that comes after 21 years since your school-leaving, finds you and your solar system, in the best of health and perfection.

What you are today is the result of your past. Every student of mine and co-teachers of his school in the world is a star, and takes embodiment in this planet to do a specific task and to leave a particular message.

Newton did a task and he left a message for you and me.

Earth is our school of learning and therefore, Sir Isaac Newton becomes as an old - good old - student of the school of you and me.

Is it fair to expect your teacher to limit himself within the boundaries of mother's home, village, province or country or within the domain of his mother's religion and language? Why does one need identity that way? Different disciplines do not have to be identical instead, perhaps two specialities.

Whether a teacher takes it into account in the assessment processes of his students gathered in the class room, their religion or village or country where with which he too is classified with a subjective attitude to influence the ultimate score?

Teacher - Pupil (T-P) relationship is pre-destined. Before, what the lesson unit that is taken here in this 'half day half night' school, has already been rehearsaled or planned or agreed upon long before somewhere there in a different plane of living.

Anyway rehearsal can never be the exact copy of what that is materialized there from due to time, timing eventualities and etc. Not that, the eye to eye contact between teacher and pupil is materialized at the first time along with the commencing of the lesson here in the gross class rooms but that has been long before established.These are things that may be an enigma for some... but in future it may not be. You are gifted learners of Jaffna Hindu College since you offered physics for Sri Lankan GCE (A/L).

Last past 21 years of life lived by you all should have given you some other further lessons to you to check and see the improvement of your own colour (frequency) and loudness ranges - also some resonance and thereby some experiences.

This is the right time for you to think of meta-physics' lessons. Your universe (the space which your mind occupies) needs addition and subtraction oust the stems within.... Because, what you would be in future would be the result of what you are today.

You are grateful... I know, but then Mr.A.Panchalingam has a claim for a good share of your gratefulness, as because he was matching and comforting my work and your work both at that time. Let me recall at this occasion, your former principal Mr.A.Panchalingam , a neutral personality who made your school as student centred and who became school centred.

Do you know CHEMMANACHCHELVI'S Servant......?

God bless you.
**Mr.Ratnam Raveendranathan**
Physics Teacher - Philosopher - Guide

## மீண்டும் பள்ளிக்கு ஒன்றுகூடல் இதய கீதம்

# நீல வெள்ளை ஒளியினிலே...

பல்லவி

நீல வெள்ளை ஒளியினிலே
நிறைகிற(து) அன்பு விழியினிலே
கால மென்னும் கடற் கரையில்
கலங்கரை விளக்கெம் வழியினிலே!

நீல வெள்ளை ஒளியினிலே
நிறைகிற(து) அன்பு விழியினிலே..

சரணம் 1

கல்வி என்கின்ற படகு தந்து,
கடின உழைப் பென்னுந் துடுப்புத் தந்து,
செல்ல செல்ல எம் பயணங்களில்
சிறந்த துணையாக இனிதுவந்தாள்.
[நீல வெள்ளை....]

சரணம் 2

இந்து அன்னையின் சொந்தங்கள் நாம்
இனிய பரம்பரையில் வந்தவராம்
சிந்து பாடி நாம் திரிந்த மடி
சிறப்பைப் பாடலாம் இருந்தபடி - அன்னை
சிறப்பைப் பாடலாம் இருந்தபடி.

நீல வெள்ளை ஒளியினிலே
நிறைகிற(து) அன்பு விழியினிலே
ஞால மெங்கும் அவள் புதல்வர்
நலம் நாட்டிச் செல்கிறார் வழியினிலே!
புகழ் நாட்டிச் செல்கிறார் வழியினிலே!

**கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்**
முதுநிலை விரிவுரையாளர்
ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக் கழகம்
[சிரேஷ்ட மாணவர் முதல்வர்-1994]



# ஈழம் வாழ் இந்துக்களின் உயர் அறிவாலயம் யாழ் இந்துக் கல்லூரி

சைவ சேனாதிபதியாக, சைவத்தின் காவலராக இருந்த ஸ்ரீலஸ்ஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் நமது நாட்டில் சைவக் கல்வியின் எழுச்சிக்கு வித்திட்ட மூலபுருஷராகத் திகழ்ந்தார்.

1848ம் ஆண்டு வண்ணார்பண்ணையிலே சைவப்பிரகாச வித்தியாசாலை ஒன்றினை நாவலார் பெருமான் நிறுவினார்.

சைவப்பண்பாட்டுடன் கூடிய கல்வியை வழங்கும் தாய்மொழிக் கல்விக்கூடமாக இவருடைய பாடசாலை செயற்பட்டது. இவருடைய வேண்டுதலை எற்ற பல சைவப்பெரியார்கள் கிராமங்கள் தோறும் சைவப்பாடசாலைகளை நிறுவினார்கள்.

அக்காலத்தில் ஆங்கிலமொழி மூலமாக அறிவியல் கல்வி உட்பட பரந்துபட்ட கல்வியினை வழங்கும் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் கிறிஸ்தவ மிஷனரிகளால் நடாத்தப்பட்டன.

ஆங்கிலக் கல்வியென்ற இனிப்புப் பண்டத்தைக் காட்டி நம்மவர்களை மதம்மாற்றும் முயற்சியில் இவர்கள் பெரிதும் ஈடுபட்டார்கள். சைவப் பண்பாட்டுச் சூழலிலே ஆங்கிலக் கல்வியை வழங்கவேண்டுமென்று விரும்பிய நாவலர் பெருமான் 1872ம் ஆண்டு வண்ணார்பண்ணையிலே சைவ-ஆங்கில





வித்தியாசாலை ஒன்றை நிறுவினார்.

மக்கள் ஆதரவு போதாமையாலும், அரச அங்கீகாரம் கிடைக்காததாலும் நான்கு வருடங்களுக்கு மேல் இவரால் இப்பாடசாலையைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை.

1879ல் நாவலர் பெருமான் சிவபதம் அடைந்தார்.

நாவலருடைய மறைவுக்குப்பின் சைவத்தமிழருக்குத் தலைமையில்லாத இடைவெளி ஒரு பத்து வருடகாலம் நிலவியது.

நாவலருடைய சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டுமென்று விரும்பிய நாவலரின் வழிவந்தவர்களால் 1888ம் ஆண்டு சைவபரிபாலன சபை நிறுவப்பட்டது.

சைவக்கல்வியை வளர்ப்பதும் சைவபரிபாலன சபையின் உயர்நோக்கங்களில் ஒன்றாக இருந்தது.

1890ம் ஆண்டு விஜயதசமி நாளில் இப்போது உள்ள இடத்தில் தோற்றம் பெற்ற யாழ் இந்துக் கல்லூரியினை முதல் இருபது வருடங்கள் வரை சைவபரிபாலன சபையினரே நிர்வகித்து வந்தார்கள்.

யாழ் இந்துக் கல்லூரியின் தோற்றத்தினைத் தொடர்ந்து யாழ் குடாநாட்டில் பல பிரதேசங்களில் இந்துக் கல்லூரிகள் தோற்றம் பெற்றன.

இந்துக்கல்லூரிச் சபை தோற்றம் பெற்ற பின்பு யாழ் இந்துக்கல்லூரியும் அச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ் இந்துக்கல்லூரி வளாகத்தின் உள்ளே கல்லூரி ஆரம்பிப்பதற்கு முன்பே சிறியதொரு ஆலயம் காணப்பட்டது.

கல்லூரியின் நூற்றாண்டு விழா நடைபெற்ற காலத்தில், ஞானவைரவப் பெருமானுடைய ஆலயம் புனரமைக்கப்பட்டது.

யாழ் இந்துக்கல்லூரியில் கல்விபயின்ற மாணவர்களின் உயர்விற்கும் எழுச்சிக்கும் ஞானவைரவப் பெருமானின் அருளாட்சியும் ஒரு காரணமாகும். காலங்காலமாக பல ஞானிகளும், யோகிகளும், கல்விமான்களும் வருகை தந்து எங்கள் கல்லூரித்தாயை ஆசீர் வதித்திருக்கிறார்கள்.

வீரத்துறவி சுவாமி விவேகானந்தர், கலாயோகி ஆனந்தக் குமாரசாமி, பாரத நாட்டின் தேசபிதா மகாத்மா காந்தியடிகள், சுத்தானந்த பாரதியார், சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார், தவத்திரு குன்றக்குடி அடிகள் போன்ற பலர் கல்லூரிக்கு வருகை தந்து அருளாசியினை வழங்கியுள்ளார்கள்.

கல்லூரியின் மாணவனாக (1959 -1965), ஆசிரியராக (1988-1991), பெற்றோராக (1986-2010) இருந்த எனக்கு எங்கள் கல்லூரியின் மேல் அளவிறந்த பற்றும் அபிமானமும் உள்ளது.

நானும் எனது ஐந்து பிள்ளைகளும் அங்கே கல்வி கற்றதனால் எனது குடும்பத்தின் அறிவாலயமாகவே இந்துக் கல்லூரியை இன்னும் மதிக்கிறேன்.

இந்துக் கல்லூரியின் மாணவர்கள் பலர் ஈழத்தில் மாத்திரமல்லாது உலகின் பல நாடுகளிலும் ஒளிவீசிப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

வைத்திய கலாநிதிகளாக, பொறியியல் வல்லுனர்களாக, கணக்காளர்களாக, அரச நிர்வாகங்களில் உயர் பதவிகள் வகிப்பவர்களாக, சட்டத்துறை வல்லுனர்களாக, பேராசிரியர்களாக, கலைஞர்களாகப் பல துறைகளிலும் பரந்துபட்டு பணியாற்றிவருகின்றார்கள்.

1989, 1990, 1991ஆம் ஆண்டுகளில் என்னிடம் 9, 10, 11 ஆம்



வகுப்புகளில் கல்விபயின்ற மாணவர் களிற் பலர் 1994ம் ஆண்டு க.பொ.த (உயர் தரம் ) பரீட்சையை எழுதினார்கள்.

1994 ஆம் ஆண்டில் க.பொ.த (உயர் தரம்) பரீட்சை எடுத்த மாணவர்களில் பலர் இன்று ஈழத்திலும் உலகின் பல நாடுகளிலும் உயர்ந்த பதவிகளில் பணியாற்றி வருகிறார்கள்.

இவர்கள் அனைவரும் வரும் ஏப்ரில் முதல் வாரத்தில் சென்னையில் ஒன்று கூடுகிறார்கள்.

தங்களுடைய கல்லூரிக் காலத்தையும், மாணவப் பருவத்தையும் நினைவு கூரும் நிகழ்வாக இதனை ஒழுங்கு செய்துள்ளார்கள்.

இனப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று, சமுதாயப்பற்று எல்லாம் நிறைந்த இந்துவின் மைந்தர்கள் அனைவரும் ஒன்றுகூடும் நிகழ்வு வாழ்வில் அரியதோர் சந்தர்ப்பமாகும்.

எங்கள் கல்லூரி மாணவர்கள் ஆலயத்திற்கு வந்தால் சிவபக்தர்கள் போலக் காட்சி தருவார்கள்.

விளையாட்டு மைதானத்தில் துடிப்புள்ள விளையாட்டு வீரர் களாகப் பவனி வருவார்கள்.

தங்கள் தொழில்கடமைகளைச் செய்யும் பொழுது கர்மயோகிகள் போலச் செயற்படுவார்கள். பதவிகள் பட்டங்கள் பெற்றாலும்



பணிவுடைமை அவர்களிடம் இருக்கும். தொண்டர்களாகவும் செயற்படுவார்கள்.

தலைவனாகவும் பிரகாசிப்பார்கள். துன்பப்பட்டவர்களின் துயரைத் துடைக்க வேண்டுமென்ற அன்புள்ளம் இவர்களிடம் நிறைய உண்டு.

என்னுடைய அன்பு மாணவன் குணரத்தினம் பார்த்திபனிடம் அதீதமான ஆற்றல் உண்டு.

தான் எடுத்த காரியத்தை எத்தகைய தடைகள் வந்தாலும் அதனைச் சாதிக்கும் தன்மை உண்டு.

தூயவை துணிந்தபோது பழி வந்து தொடர்வதில்லை.


என்ற கம்பனின் வாக்கினை ஆதாரமாகக்கொண்டு செயற்படும் திறமையும் உள்ளது.

நல்ல மாணவர்களே ஒரு ஆசிரியனுக்குக் கிடைக்கக்கூடிய மிகப்பெரிய சொத்து.
ஒரு ஆசிரியருக்கு தான் பெற்ற பிள்ளைகள் வாரிசுளாக இருந்தால், மாணவர்கள் ஞானவாரிசுளாகத் திகழ்கின்றார்கள்.

தமது ஞானவாரிசுகளாகிய மாணவர்களின் புகழிலும் சிறப்பிலும் ஆசிரியருக்கு ஒரு பங்குண்டு.

எனது அன்புக்குரிய மாணவச்செல்வங்களும் அவர்களுடைய சந்ததியினரும் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு பெற்றுச் சிறப்புடன் வாழ எங்கள் கல்லூரி வளாகத்திலிருந்து ஞான ஆட்சிபுரியும் வைரவப்பெருமான் திருவருள் துணை அனைவருக்கும் கிடைக்கவேண்டுமென்று இதயபூர்வமாகப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. சிவ. மகாலிங்கம்**
(இந்துவின் முன்னாள் ஆசிரியர்)





# அன்னை மடியில்

அன்னை மடியில்......!

அன்னை மடியில்........ கண் திறந்தோம்......!!!
ஐயிரு திங்கள் தாயின் திருவயிற்றில் நமக்கு உணவுடன், உணர்வையும் ஊட்டி, உயிருடன் உடலையும் வளர்த்து, தன் மூச்சடக்கி இன்னுயிரில் வலியுந்தாங்கி இவ்வுயிரை ஈன்றெடுத்துப் பின் தானும் மறுபிறப்பெடுத்து உதிரத்தையும் உணவாக்கி........!!!

அன்னை மடியில் தவழ்ந்த உயிர் இது, அன்னையுடன் நமக்கிருக்கும் உணர்வு வார்த்தைகளில் வார்த்திட முடியாதது! அந்த உணர்வு வலையத்தினுள் அனுபவத்தில் அறிந்த அன்பு என்ற வாழ்விலக்கணம், அறிவாய் மலரத் தவழ்ந்த இடம்......!

இன்று உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் மக்களிடையே, இந்துவின் மைந்தர்கள் என்ற ஒற்றை அடையாளத்துடன், தங்களது துறைகளில் உச்சத்தில் மிளிர்கின்ற எனது சகோதரர்களுடன் ஒரு அனுபவப் பகிர்வினூடாக உணர்வாய் ஒன்றுவதில் மட்டற்ற மகிழ்ச்சி!

எண்ண அலைகளைக் கொஞ்சம் பின்னோக்கி நகர்த்தி, ஒவ்வொரு நாளினதும் கனிசமான பகுதிகளை ஒன்றாகப் படித்த நண்பர்களின் இணைவில் ஆனந்தமாகக் களித்திருந்த அந்த நாட்களில், சற்றே மனதாரக் களைப்பாறி, ஆன்மபலத்துடன் ஓர் புதிய வல்லமையும் பெற்று வருவோம் வாருங்கள்.

மருண்ட விழிகளும், உள்ளத்தில் வெறுமையும், சிந்தையில் எதிர்காலக் கனவுகளும் கைகளில் புத்தகப்பையும் கனக்க, மனதில் இனம்புரியாத கலக்கம் அழுத்தங் கொடுக்க தனிமையில் இந்து அன்னையின் கருவில் முளைத்த அந்த முதல் நாள்.....!

நமது வகுப்பறைப் பிரிவுகளை கண்டுபிடித்து அங்கே எமக்கோர் இடம்பிடித்து, அருகில் இருந்தவன் பெயர் அறிந்து நட்புடன் நாம் சிரித்த அந்த முதல் நிமிடங்களில் ஏற்பட்ட உணர்வு முதிர்ந்து அந்நாளின் இடைவேளையின்போதே சகோதரன் அருகிருக்கப் பெறும் ஆத்ம சக்தியைப் பெற்று, இந்துவின் மைந்தர்களாய் நிறைவடைந்த அந்த நாளின் பின்......!

நமது ஏழு வருடப் பள்ளிக் காலம், நமக்குத் தந்த ஆழுமைகள், தகமைகளை, அடிப்படை விடையங்களை பிறிதொரு பார்வைக் கோணத்தில், நமது விழிகளால் அனைவரும் காண்பதற்கு ஏதுவாகப் பகிர்வதற்கான வாய்ப்பாக எடுத்துக்கொள்வோம்.

கல்வி கற்க என்ற ஒற்றை நோக்கத்துடன் கல்லூரி சென்ற அந்நாட்களில், நமது உள்ளத்தில், தனிப்பட்ட கவலையின் கோடுகள் தீட்டிய சித்திரங்கள் என்று

ஒன்றுகூட எங்களது நினைவுப் பெட்டகத்தில் பதிவாகவில்லையே!

ஏன்?

நமது உடலின் பாகங்கள் அனைத்தும், அவை எந்தெந்த நோக்கத்திற்காக படைக்கப்பட்டதோ அந்தந்தத் தொழிலை ஒன்றுடன் ஒன்று இணைந்து இயைந்து செவ்வனே செய்தால் எப்படி நாம் ஆரோக்கியமாக வாழமுடியுமோ, அப்படி நமது நோக்கத்திற்கான படிகளை, இணைந்து ஒன்றாக

எமக்குத் தெரியாத பாடத்தைக் கேட்டால் தமக்குத் தெரிந்த அத்தனையையும் ஆனந்தமாகச் சொல்லித் தந்தவர்கள், இன்னும் நமது அந்தரங்க சந்தேகங்களை ஐயந்திரிபு அறத் தெளிவுபடுத்தியவர்கள், மற்றும் நமது அன்றாட வாழ்க்கையில் ஊக்கம் கொடுக்கும் பல குறிப்புகள், அறிவுரைகள், நெறிப்படுத்தல் என்பன மட்டுமல்லாமல் நமக்குத் துணையாக அருகிலிருந்து வலுச்சேர்த்தவர்கள் ஏராளம் ஏராளம்.....!

நாம் வளர்த்துக் கொண்டோம் வலுப்படுத்தியுங்கொண்டோம்!

பசித்த முகம் வாட சிற்றுண்டிச்சாலையில் நின்ற எமது பசி போக்காமல் எம்மைக் கடந்து யாரும் போனதில்லை! சிலர் தாமாகவே கொடுத்தார்கள், சிலரிடம் பறித்தோம், சிலரிடம் பகிர்ந்து கொண்டோம், ஆனால் அது நம்மிடையேயான பிணைப்பை இன்னும் அதிகப்படுத்தியது என்பதுதான் சத்தியம் அல்லவா, அந்த உரிமையில் நண்பன் வீட்டு அடுக்களைவரை சென்று




கடக்கிறோம் என்ற எண்ணங்கூட இல்லாமல் கடந்திருக்கிறோம் சேர்ந்தே....!

எமது திறமைகளையும், தனித்தன்மைகளையும் தட்டிக் கொடுத்து மெருகேற்றியது மட்டுமல்ல குறும்புகள், வம்புகளையும் பொறுத்துப் புன்னகையுடன் கடந்து எமது ஆற்றலையும் தன்நம்பிக்கையையும் வளர்த்துக்கொண்டோம்.

பாடத்தில் சந்தேகத்தை நிவர்த்தி செய்வது, இலகு வழிமுறையை கண்டறிவது எப்படி என்றும் குறைந்த நேரத்தில் விடைகாண்பதற்கு என்செய்வது? என்பனவற்றைக் குழுக்களாகப் பிரிந்திருந்து விவாதித்ததும், மாற்றீடுகள், புதிர்களை சவாலாக எதிர்கொண்டதுவும், ஆரோக்கியமான போட்டிகளினூடாக கொழுகொம்பைச் சுற்றி வளரும் கொடிபோல, நம்மை

வேண்டியதை எடுத்து உண்ணும் நமக்கு, வாழ்வில் பல விடயங்களை கற்றுத் தந்த களங்கள் நண்பனின் வீட்டுச் சடங்குகளும் சம்பவங்களுமே அல்லவா.....!

வகுப்பில் மட்டுமல்ல, கல்லூரி வளாகம் ஏன் யாழ் நகர வீதிகளில் எங்கேயும் ஆசிரியர்கள், நட்புடன் நம்மை வழிநடாத்திச் சென்றார்களேயன்றி அச்சப்பட வைத்ததில்லை. ஆசிரியர் ஒவ்வொருவரையும் தோழமையுடன்



அனுகி, அவர்களருகில் விவாதித்து நமக்கான தீர்வுகளையும் ஆய்ந்து கண்டோம். இயல்பிலேயே அச்சம் அறுத்து, பணிவையே பண்பாகவுங்கொண்டு நல்லதை நினைக்கவும், நினைத்ததை முடிக்கவும் ஊக்கமும் பயிற்சியும் பங்களிப்புந்தந்த ஆசான்கள் வழி காட்டிகளானார்கள், நண்பர்கள் போன்றே....!!!

கணவன், மனைவியென்ற இருவரிடையே ஏற்படும் கருத்து முரண்படே இரண்டு குடும்பங்களையும், மதங்கள், சமூகத்தின் சாபக்கேடான சாதிகள், பிரதேசவாத பிரிவினைகளை உண்டாக்கப் போதுமானதாக இருக்கும்போது, எப்படி இலங்கை தீவின் கணிசமான பகுதிகளில் இருந்து பல மதங்களிலும், பிரதேசங்களில் இருந்தும் வந்து தமது பல்கலைக்கழகப் படிப்புக்கும் எதிர்காலக் கனவுகளுக்கும் சாதனைகளுக்கும் போட்டியாக இருக்கச் சாத்தியமானவர்களிடம் சகோதரத்துவம் பேணப்பட்டது என்பது அன்னை இந்துவின் மடியின் மகிமையல்லவா?

அதற்காக நமக்குச் சொந்தக் கருத்துகள் இருந்ததில்லையா? என்றால், நிச்சயமாக இருந்திருக்கின்றன, கருத்துகள் பலவற்றைத் தம்மகத்தே கொண்ட ஆற்றல் மிகுந்த, முன்னேற்றத்தில் நாட்டமும் வேட்கையுங் கொண்ட இளம் பருவத்தினர் எப்படி ஒரு தாய்ப் பிள்ளைகளாக இருந்திருக்க முடியும்? இருந்திருக்கிறோமே, அதற்கு ஆதாரம் நாமேயுமல்லவா....!

நமது கருத்துகள் என்றும் நமது சகோதரர்களிடம் வலிந்து திணிக்கப்பட்டவோ, ஆதிக்கம் செலுத்தவோ அன்றிப் பாகுபடுத்தும் ஆயுதமாகவோ பாவிக்கப்பட்டதில்லை! அவரவர் கருத்துகளுடன் வளைய வந்தோம், எமக்குத் தெரிந்த முறைகளில் வாய்த்த சந்தர்பங்களின் ஊடாகப் பகிர்ந்தும் இருக்கிறோம்!

ஆனால் அவற்றால் என்றும் பிளவுபட்டதில்லை எமதுறவு, கொள்கைகள் கருத்துக்கள் நம்மை ஒன்று சேர்த்திருக்கின்றன, என்றும் பாகுபடுத்திப் பிரித்தாண்டதில்லை, வயது வேறுபாடு பாராமல் நமக்குச் சில வருடங்கள் மூத்தவர்களிடமும், ஏன் நமக்கு இளையவர்களிடமுங்கூட அனுசரித்து சகோதரத்துவம் பேணவும், அவர்களது உயர்வுக்கு ஊக்கம் கொடுக்கவும் கற்றதுடன், சுயநலம் என்ற சொல்லுக்கு அர்த்தத்தை ஏட்டில் மட்டுமே அறிந்தோம், இது நமது கல்லூரி அனுபவம், எண்ணிப்பாருங்கள் இன்று நமது நிலையை.......!

திரைகடல் ஓடியும் திரவியந் தேடு என்ற ஔவையின் மொழியோ இல்லை வேறு காரணமோ தெரியாது, இருந்தாலும் உலகின் மூலை முடுக்கெல்லாம் தமிழன் பிரசன்னமாகி ஆண்டுகள் பலகடந்து போயின, அப்படிப் பரந்து விட்ட தமிழனுள், இந்துவின் மைந்தர்கள் ஏராளம்! அதில் நாமும் இங்கே அங்கங்கள்தானே....!

இன்று சர்வதேச நாடுகளில், பல்லின மக்களின் மத்தியிலே, கூட்டுக் கலாச்சாரச் சூழலிலே, நமது வாழ்வு, ஓட்டப் பந்தயக் குதிரைகளின் வேகத்தில் விரைகின்ற போதிலும், இங்கே நமது நிலையைத் தக்கவைத்துக் கொள்வதற்கே திறமைகள் யாவையும் பயன்படுத்த வேண்டிய நிலையில், முன்னேறி நமது துறைகளில் உச்சம்பெற வேண்டும் என்றால், நமது திறமைகளுடன் நேரந்தவறாத முடிவுகளை தேர்வு செய்யவும், தேர்ந்த முடிவுகளை செயலாக்கத் தேவையான

மனத் துணிவை ஆயுதமாகவும், தன் நம்பிக்கையும் செயற் திறனையும் மூலதனமாக்கி, அநாயாசமான தேர்ச்சியைக் காட்டி உச்சபட்ச இடங்களைத் தக்க வைக்கும் ஆற்றல் எப்படி நமது சகோதரர்களுக்கு இலகுவில் வாய்த்தது....?

புதிய முயற்சிகளில் தயக்கமின்றிக் கலந்து, நமது தவறுகளில் இருந்து பாடங்கற்று வெற்றிக்கு வித்திடத் தேவையான ஆற்றலையும் தன்நம்பிக்கையையும் அனுபவமாக கண்டதுவும். தெரிந்த விடையங்களை அனைவரும் பயன் பெற ஆனந்தமாகப் பகிர்ந்து, பிறரை நெறிப்படுத்துதலின் வாயிலாக தொடர்ந்து கற்றுக் கொள்ளவும், கற்றுக் கொடுக்கவும் என் நேரமும் ஆயத்தமாக இருந்ததே நம்மை மேம்படுத்தவும், ஆரோக்கியமான ஆலோசனைகள் விவாதங்களின் வாயிலாக என்றும் புதிய மாற்றத்திற்கும் தயாராக இருந்து, பிறருக்கு நமது செயல்களால் முன்னோடிகளாகத் திகழ்ந்து நமது பயணத்தை இனிய அனுபவமாக மாற்றி, அனைவருக்கும் நம்முடைய இருப்புத்தன்மையை வலுவாக உணர்த்தியிருக்கிறோம்!


இன்னும் சொல்லப்போனால் இன்று நமது நிலை உயர்வாக இருக்க, நமது பள்ளியில் கிடைத்த அனுபவங்களினூடாக நமது இயல்புகளைப் புடம்போடப்பட்டு நமது வாழ்வில் மதிக்கத்தக்க வகையில் அச்சில் வார்க்கப்பட்ட உள்ளங்களை மூலதனமாக அளித்த அந்த ஏழு வருடங்கள்...!!!

இன்னும் நாம் சார்ந்து வாழும் சமூகத்திற்கு பயன்படும் வகையில் பிறரது நலனில் அக்கறை கொண்ட செயல்களால் அன்பைப் பகிர்ந்து, அனைவரையும் நட்புரிமை பாராட்டி ஒரே பாதையில் பயணிக்கும்போது, நமது பழக்க வழக்கங்களில் மாற்றம் தேவை என்று கருதினால், அவற்றை மறக்கவும் புதிய நல்ல வழிகளை எளிதில் பயின்று பின்பற்றவும், நமது உள்ளம் தயார்படுத்தப்பட்டிருக்கிறது, நமது தோழமை சகோதரத்துவத்துக்குண்டான வாஞ்சை, அன்பு மற்றும் அக்கறையுடனும் நமது ஆசிரியர்கள் மாணவர்கள் தொடர்பு நட்பு மிகுந்த வழிகாட்டல் என்ற பாணியில் அச்சம் தவிர்ந்து ஆழுமை மிகுந்த அனுபவமாக நம் நினைவேட்டில் பதியப்பட்டிருக்கின்றது.

ஆணவம் அகங்காரம் என்ற முன்னேற்றத்திற்கு தடைகளாக விளங்கும் முட்டுக்கட்டைகளற்ற அன்பான மகவுகளை இந்த உலகத்துக்கு மீளப் பிரசவித்த யாழ் இந்து அன்னை மடியில் தவழ்ந்த ஒரு தாய் பிள்ளைகளே.......!

உயிர் இவ்வுலகத்தில் உதித்தபின் இந்தப் பிரபஞ்சத் தாயிடம் இருந்து அண்டக்கதிர்களை சக்தியாக உடலிலும் உயிரிலும் பாய்ச்சி மனித குலம் செளிக்கவென வாய்த்த அறிவியல் உச்சமான ஆலயம் என்பது நமது அன்னையின் திருவயிற்றின் மாதிரியில் வடிவமைக்கப்பட்டது, தற்கால வியாபார மையக் கொள்கைகளுக்கு அப்பாற்பட்ட அதியுயர் நன் நோக்கம் கொண்ட கோவில் வழிபாடுகள் நமது ஆன்மாவுக்கும், உள்ளம் மற்றும் உடலுக்கும் செய்யும் நன்மைகள், நமது அனுபவத்தில் மட்டுமே நிறைவு காண்பதுபோன்று!

அன்னை மடியும், ஆலயமும் நமக்குத் தந்த அனைத்து



நற்பேறுகளையும், நம்மகத்தே நமக்கான குணாம்சங்களாக மாற்றி இந்த உலகின் எந்த மூலையில் தூக்கி வீசப்பட்டாலும் அங்கே விதையாக விழுந்து, பெரு விருட்சமாக வளர்ந்து, பலருக்கு நிழலாகவும் நம்மினத்துக்கு வரமாகவும் திகழும் யாழ் இந்து அன்னை மடியில் மீண்டும் பிறந்த இந்துவின் மைந்தர்களே, இந்த உலகத்தில் எங்கே இருந்தாலும், எப்படிப்பட்ட சூழ்நிலையை எதிர்கொண்டாலும், தனிமை தீயாகத் தகித்தாலும்.....!

உங்கள் உள்ளத்தினுள் பெரும் உந்து சக்தியாக, உங்கள் செயலுக்கு என்றும் உறுதுணையாக, உங்கள் உயர்வு என்ற ஒரே எண்ணங் கொண்ட வலுவான கூட்டம் ஒன்று உங்கள் பின்னால் என்றும் நிற்கிறது என்ற உறுதியுடனும் நம்பிக்கையுடனும்,

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே...'
என்ற கவிதை வரிகளுக்கிணங்க அன்னை மடியிலிருந்து தவழ்ந்து இந்த உலகத்தில் நமது வாழ்வில் நடைபழகும் கூட்டமிங்கே! அன்றும், இன்றும் என்றும் இணைந்திருப்போம் என்ற கருத்தை நண்பர்கள் என்ற உறவுகளுடன் நட்புடன் பகிர்வதில் இந்த சகோதரன் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நமது ஒற்றை அடையாளமாக இந்துவின் மைந்தர்கள், இனத்தின் அடையாளமான மொழியாலும் இணைத்து நிற்பதாலும், உங்களுடன் இணைந்திருந்த நாட்களை நெஞ்சில் நிழலாட வைப்பதற்கு தமிழின் பங்கு இன்றியமையாதது என்பதாலும், நண்பன் என்ற உரிமையுடனும் காணும் இடங்களிலும், முகப்புத்தக விசாரிப்புகளிலும் தமிழ் மொழியைப் பாவனைக்குட்படுத்தி, நமது குழந்தைகளுக்கும் தமிழை எழுதப் படிக்கப் பழக்குவதாலும் ( குறிப்பாகப் புலம் பெயர் நாடுகளில் வசிப்பவர்கள்) தமிழுக்கும் கொஞ்சம் வாழ்கை காலத்தை நீட்சி கொடுக்கும் ஆற்றல் நம்மிடம் இருக்கிறது!

தமிழ் என்ற உலகின் தொன்மையான மொழியை நமது இனத்தின் அடையாளமாக நம்மகத்தே கொண்டவர்கள், நம்மினத்துக்கு வரமாக வாய்த்த அன்னையின் மடியில் தவழ்ந்தவர்கள், நினைத்ததை முடிப்பவர்கள், நல்லதையே நினைப்பவர்களாகிய உங்களிடம் இந்த சகோதரன் வேண்டி நிற்பது, நம்மிடையே அனைத்து தொடர்பாடல்களும் தாய்த் தமிழில் இருக்குமானால், அவை நமது பள்ளிக்காலத்தை மீட்டியபடியே இருப்பதுடன், நமது ஞாபகங்கள் மூலம் ஆனந்தத்தை அளிப்பதுடன், நமது தாய்த் தமிழ் மேன்மேலும் செளிக்கும், நமது அடையாளம் சிறக்கும், நமக்கும் வலுவிருக்கும், நமது எதிர்காலமும் கொழிக்கும் அன்னை மடியில்....!

**தினேஷ் குகானந்தா**
வகுப்பு 13A (கணிதம்)



# இந்து அன்னை

கனவுகளின் சோலை
விரிய விருட்சங்களின்
விளை நிலம்
புல்லாகப் புகுந்தவைகூட
ஆலாக வெளியேறும்
அற்புத கலாசாலை
இந்து அன்னை

இவள் கடல் என்றால்
வயிற்றில் சுமந்தவை
அத்தனையும்
முத்துக்கள் தரும்
சிப்பிகளே.

இவள் தீ என்றால்
புடம்போட்டு அனுப்பியவை
அத்தனையும்
பத்தரை மாற்றுத்
தங்கங்களே.

இவளைக் காற்று என்பிராயின்
பதர்களைக் கூட னற்றும்; போதே
நெல்மணியாக்கும்
வித்தை தெரிந்தவள்.

எங்கள் குழந்தைக் குழப்படி முதல்
மீசையோடு முளைத்த
வால்தனங்களையும்
கூடவே இருந்து
பொறுத்துக் கொண்டதால்
நிலம் என்று சொன்னாலும் தகும்.

வளர்ந்த செல்வங்கள்
எல்லாம் விரிய இடம் கொடுத்த
வான் இவள்.

அதுதான் அவர்களிற்
பலர் வான் புகழ் கொள்வது
வழமையாகிவிட்டது.

கல்வியினைத் தாண்டி
நல்வாழ்வினைக் காட்டிய
பஞ்சபூத தத்துவம் இவள்.

இவள் வயிற்றில்
ஒட்டி வாழ்ந்த உரிமையில்
உருவான உறவுகள் நாம்
இன்று மீண்டும்
நினைவு அடுக்குகளைத்
தூசு தட்டி
பழங்கதை பேசும்
சுகானுபத்தில்....

அனுபவம்
சிறக்க அன்பான
வாழ்த்துக்கள்.

**ச.மணிமாறன்**
வகுப்பு 13 (கலை)



# நினைவழியா நாட்கள்

எண்பதுகளின் நடுவில் சந்தித்துக் கொண்ட
நண்பர்களின் முகங்கள் நாற்பதுகளில்
சங்கமித்துக் கொள்ளும்
சந்தர்ப்பம் இது !

வல்லமை சேர்நல் வாழ்வினைத் தந்து
துல்லிய நேர்சிந்தயை தூண்டி
அல்லலைப் போக்கும் வல்லவா! - என்னை
ஆளுமை செய்யும் இந்துவின் ஞான வைரவா!
உன்னை என்றுமே நான் துதிக்க மறப்பேனோ!

வெள்ளைப் பட்டுடன் வீணையும்
விரி தாமரைப் பூவிதழ் மீதமர் வாணியும்
உள்ளத்தை கொள்ளை கொள்ளும்
இந்துவின் அழகும்
நினைவினில் நின்று என்றுமே நான் மறப்பேனோ!

தாயின் மடிச்சுகத்தை,
தமிழ் மண்ணின் நற்குணத்தை,
விழுதுகள் தாங்கி விருட்சமாய் வளரும்
பள்ளியின் புகழை,
என்றுமே நான் கூறாது மறப்பேனோ!!

கொஞ்சு தமிழ் பேசி
துடிப்போடு பிஞ்சுகளாய்த் துள்ளி
பள்ளி நாம் வருகையில்
பிதா மகராய்
நெஞ்சுறுதி தந்து - கல்விப்
பொந்தினில் தேனினைக் ஊட்டி-
இந்த அக்கினிக் குஞ்சுகளை அடைகாக்கும் அந்த
ஆசிரியரை என்றுமே நான் மறப்பேனோ!

எங்கள் கல்லூரி நட்புக்குளத்தில்
பலர் கல்லெறிந்து பார்த்தார்கள்!
அவற்றில்
சில கருங்கற்கள் !
சில மாணிக்க கற்கள் ! சில கூழாங்கற்கள் !
இவை அலையும் எழுப்பின சில
ஆழம் அடையாது கரைந்து
காணாமலும் போயின
ஆனாலும்...

நீங்கள் எறிந்த சிக்கி முக்கி கல்லால் இன்று
இந்த தண்ணீர் சூடு பிடித்து
சுடர் விட்டு பிரகாசிக்கிறது.
இந்த சுவாலை சுருக்கென்று அணையாது.

கல்லூரி நட்பு
தன் பயணத்தை
நிறுத்திக் கொள்ளவில்லை.
என்றும்
இந்த அலைகளின் கச்சேரிக்கு ஓய்வில்லை !
சந்திப்புகள் சர்வதேசத்திலும் நிகழும்.

எல்லாம் இயந்திரமயமாகும்
இந்த நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில்
வேற்றுக்கிரகத்தில் அரங்கேறும்
"மீண்டும் பள்ளிக்கு!"
அழைப்பும் வரக்கூடும்

எம்மை பிரித்து விடவேணும்
பிரபஞ்சம் நினைக்குமா?

வாழ்க்கை ஒரு சக்கரம் - அதன்
பரிதி வழியே எங்கள் பயணங்கள்
தொடரும்.
சக்கரங்கள் சுற்றும்
அந்த
சுற்றுவட்டப்பாதையில் தொடரும்
பசுமை நினைவுகளாய்...



பாதச் சுவடுகளை பதிக்கும் பயணத்தின்
பள்ளிச் சங்கமம் இது!

கல்லூரி மையத்தைச் சுற்றி
தொடலியின் திசையில்
தொடரும் இந்த இலட்சிய பயணம்
தலைமீடு இன்றி முனைவாக்கம் கொள்ளும்!

பரிவு நிலையோட்ட இலத்திரனில்லா
பிணைப்புகளாக இந்த நட்புச்
சேர்க்கைகள் இன்று இணைந்து கொள்ள
கல்லூரி பசுமை நினைவுகள்
எம் விழியில் மீண்டும் விழுந்து
இதயத்துடிப்பில் உறைந்து கொள்ளும்
வேளை இது!

நினைவுகளின் தூறலில் நனைந்த படி
புதிய விடியலை நோக்கி நடையினை
தொடர்வோம்!!

நாளைய உலகம் நம் இளையவர் கையில்!

வருந்தாதீர் நண்பர்களே!
இது விடைபெறும் முற்றுப்புள்ளி அல்ல!

இப்பவே முடிகளில் வெள்ளையன்
வெளியேறத் தொடங்கி விட்டான்!

அடுத்த சந்திப்பில்
கறுப்பனைக் காண்பது கடுகளவும்
கடினம் தான்.
இருப்பினும்
என்றும் (இந்துவின்) இளைஞர்
நாங்கள் அல்லோ!

இது நாற்பதின் அத்திவாரம்!

அத்திவாரம் மீது அடுக்கும் கற்கள்
இறுகப் பிணைந்து புதிய
இணைப்பை நிச்சயம் தரும்.
இந்த இணைப்பில் இந்துவை வளர்ப்போம்!


"எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்!"

வாழிய யாழ் நகர் இந்துக் கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும்.

**உடுவில் நிலாநிறத்தன்.**

**(வி. ப. சசிவர்ணன் 13C)**





# என் நட்பு என் வழிகாட்டி

செயற்கு அரிய யாவுள நட்பின்
அதுபோல வினைக்கு அரிய யாவுள
காப்பு
(குறள் 781)

அது ஒரு கனாக்காலம், நல்லது எது தீயது எது என்பதை தெளிவுபட பிரித்தறியத் தெரியா வயது, பதின்ம வயது, செய்வதே நன்று, நன்றே செய்தோம் என இறுமாந்திருக்கும் வயது.

எவரினதும் பேச்சுகளையும் ஆலோசனைகளையும் துச்சமாக கருதி செயற்படும் காலம்.

நாமும் அதை கடந்தோம்.

நன்றோ தீயதோ நின்று செயற்பட முடியா காலம். நன்றே கடந்தோம் நட்பின் துணை கொண்டு. க.பொ.த சாதாரண தர பரீட்சைகள் முடிந்து முடிவுகள் வருவதற்கிடையிலான ஒரு மம்மலான காலம். முடிவுகள் எவ்வாறு வரும்? உயர் தரத்தில் என்ன பாடத்தை தெரிவு செய்வது? எவ்வாறு எமது உயர் தரத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்வது ? எமது எதிர் காலம் என்ன? என்பதை எல்லாம் சிந்திக்க தூண்டாத காலம்.

எமது பாடசாலையில் நாமெல்லாம் கணித பிரிவு, விஞ்ஞான பிரிவு, கலை, வர்த்தகம் என்று பிரிபடாது கும்பலோடு கும்பலாக கணித பிரிவில் இணைந்து கணிதபிரிவின் அடிப்படைக் குழப்பங்களை எம்மிடம் புகுத்தி கொண்டிருந்த நேரம். பெரும் குழப்பம்.

எனது சிறு வயது ஆசை டாக்குத்தராக வந்து எல்லோரையும் மருந்தை காட்டியே வருத்தத்தை வர வைக்கவேண்டும் என்று. இப்போதோ கணிதத்தின் திருகுதாளங்கள் என் மனதின் ஓரத்தில் சிறிது ஆர்வத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

வயது அப்படி.

எது கடினமோ அதை முயற்சி செய் என மனது உரைக்கும் வயது. பதின்மங்கள்.

எமது பாடசாலை கணிதப்பிரிவில் திறம் என்ற பெயரையும் கொண்டிருந்தது.

பாடசாலையும் இப்படியாக எமது பதின்ம வயது மனதை கும்பலோடு கோவிந்தாவாக்கி பல பேருக்கு கணிதத்தின் மீது ஆர்வத்தையும் சில பேருக்கு கோபத்தையும் உருவாக்கி விட்டது.

எனது நிலையோ திரிசங்கடம். எனது ஊரவன் சுந்தர் வைத்தியனாகி உயிரியல் விஞ்ஞானத்தில் பைத்தியமாகி விட்டான்.

சாந்தனோ தமிழே உயிரே என்று கம்பனை கலங்கடிக்க நின்றான்.

பலபேர் பலவாறு உசுப்பேற்றி நின்றார்கள்.

தெளிவான வழிகாட்டல் இல்லாத காலம். (இன்றும் பாடசாலைகளில் அதே நிலை தான்) என்னே செய்வேன்?

காணாதான் காட்டுவான் தான் காணான்
காணாதான் கண்டானாம் தான்கண்டவாறு..
(குறள் 849)



குழப்பத்திலேயே தெளிவும் பிறக்கும், அத்தெளிவே பரிபூரணமானது.

ஒரு சனிக்கிழமை காலை நேரம் எட்டு மணியளவில் வீட்டு வாசலிலே சாரங்கன்.. என்றும் பின் அங்கிள்.. என்றும் நன்கு பழகிய குரலொன்று அழைத்தது.

முகம் கூட கழுவாத காலை நேரம்.

வெறும் மேலுடன் வழுகிய சாரத்தை இழுத்துபிடித்து ஓரளவு போர்த்தியவாறு கதவைத் திறந்தால் ஓர் ஆபத்பாந்தனாக சைக்கிளிலே காட்சி தந்தான் பால சொருபன்... முகத்தில் பாலன், செயலில் வேகன்.

கொஞ்ச நாட்களுக்கு முன்னர் இப்படித்தான் விடிகாலை ஐந்து மணியளவில் வீட்டு வாசலில் நின்றவாறு கூப்பிட்டான் .

'என்னடா?..'

என்றால் 'வா கோப்பாய் பாலம் வரை ஓடுவோம்..' என்றான்.

அதற்கு சில நாட்களுக்கு முன்னர் கேட்டவன்.

நானும் போகிற போக்கில் ஓடுவோம்.. என்றிருந்தேன். பின் நானோ மறந்தே விட்டேன்.

இவன் அதையே பிடியாய் பிடித்து பின் வீட்டு வாசலிற்கும் வந்து விட்டான்.

பிடித்தால் பிடி தான் விடான்.

ஏலாமல் அன்று ஓடத்தொடங்கி, வயிறும், தொடையும் இறுகி, பின் வடிவும் மாறி கொஞ்ச நாட்களாக தான் தற்காலிகமாக ஓட்டத்திற்கு ஒய்வு கொடுத்திருந்த நேரம்.

மீண்டும் படலையில் நமட்டுச் சிரிப்புடன் நின்றவன் 'வெளிக்கிடு' தொடங்குகிறது 'போவோம்' என்றான்.

'எங்கேயடா?' என்று கேட்க உனக்கு ஏற்கனவே science hall இல் காசும் கட்டி பதிந்து விட்டேன்.

கணிதப் பிரிவு வகுப்பு இன்று தொடங்குகிறது,'போவோம்' என்றான்.

என்னது என்று யோசிப்பதற்கிடையில். எட்டிப்பார்த்த எனது அம்மாவிடமும் அன்றி இன்றைக்கு வகுப்பு தொடங்குது, 'வெளிக்கிடச்சொல்லுங்கோ' என்றான்.

பிறகென்ன இவன் விட மாட்டான் என்பது தெரிந்து விட்டது.

சரி போவோம் என்று நானும் வெளிக்கிட்டு விட்டேன்.

எனது கல்வியின் திசையும் அதனோடு கணிதப் பிரிவில் புகுந்தது.

வழி நெடுக கணிதப்படிப்பின் அவசியத்தையும் அதனைப் படிப்பதற்கான உபாயத்தையும் கூறிக்கொண்டே வந்தான்.


தான் உண்டு, சேர்ந்து படிப்போமேன்றான்.

சேர்ந்து படித்திருந்தால் அவனின் திறன் கொண்டு நானும் தீரம் காட்டியிருந்திருக்கலாம்.

பொறியியல் நெறியில் முடி சூடியிருந்துமிருக்கலாம்

உவப்பத்தலைக்கூடி உள்ளப்பிரிதல் அனைத்தே புலவர் தொழில்
(குறள் 394)

பலபேர் இன்று வரை எந்த நோக்கிற்காக உயர்தர பாடநெறிகளை தெரிவு செய்கிறோம் என்றில்லாது பெற்றோரின்



வற்புறுத்தலினாலோ மற்றோரின்
சொற் கேட்டோ தெரிவு
செய்கின்றனர்.

இதனால் அவர் படும் துயரம்
கொஞ்ச நஞ்சமல்ல.

பாடசாலை ஆசிரியர்களும்
"ஆசிரியம்" என்பதை விளங்காது
எதோ தொழில் செய்கிறோம்
என்பதற்கிணங்க மாணவர்
ஆசிரியர் என்ற உறவை
மேம்படுத்த தெரியாது அல்லது
விரும்பாதுள்ளனர்.

ஒரு மாணவனின் விருப்பு
வெறுப்புகளிற்கு அப்பால் விஞ்ஞான
பூர்வமாக ஆலோசனைகளை
வழங்குவதற்கு ஆசிரியர்களால்
முடியாதுள்ளது.

சமுகத்தின் தேவையை
உணர்ந்து மாணவர்களை திசை
திருப்பமுடியாத சமூகம் இன்றும்
நேற்றுமாக இருக்கின்றது.

எனக்கு நல்லாசனாக எனது
நண்பனே வாய்த்தது எனது
நற்பயனே.

என்னை உணர்ந்து என்னை
என்னையறிவித்தவன், தெளிவான
கணித ஞானத்தினால் அதன்
விளக்கத்தை கொடுத்தவன்
என்னையும் தெளிவித்தவன், ஒரு
பொல்லாப்புமில்லை என்றவன்
தனது பாதையையும் தனது
சமுகத்தின் தேவையையும் பதின்ம
பருவத்து ஏற்ற இறக்கங்களுடன்
புரிய முற்பட்டவன்.

தெளிவான வாத விவாதங்களோடு
தனது பாதையையும் தெரிவு
செய்தான். நல்லதோ கெட்டதோ
கற்க கசடறக கற்றவன் அதன்
வழி கற்றவை கற்றபின் அதன்படி
நின்றவன் வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன்.

அவன் நண்பனாக ஆசானாக
அவன் வழி காட்டி விட்ட அந்த
கணிதமே எனது கல்வியறிவு
முன்னேற்றங்களின் அடிநாதம்.

கணிதம் என்ற ஒரே காரணத்தால்
எமது பாடத்திட்டத்தில்
பொருளாதாரத்தின்
அடிப்படையை கற்றிராத போதும்,
பொருளாதாரத்தில் ஆய்வு
பட்டபடிப்பை மேற்கொள்ள
முடிந்ததுடன் கலாநிதி
பட்டத்தையும் பெற வழிகோலியது.

அன்று அவன் கொடுத்த தெளிவு
இன்று அறுவடையை தந்துள்ளது.

இன்று நான் பெற்றுள்ள
தொழில், தொழில்வாண்மை
இரண்டுமே எனது நண்பனிட்கு
சமர்ப்பணம்.

இன்றும் செய்வோம்
அதனை நன்றே செய்வோம்
பாலசொருபன்... நாம் இந்து
அன்னையின் கை பற்றியபோது
அவன்னைக்கே திலகமிட்டவர்
சிலருள் அவனும் ஒருவன்.

கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்கு தக. அவன்
வாழ்க்கை பயணத்தில் என்றென்றும்
வேகன், விவேகமான பாலசொருபன்

என் நண்பன்....
என் வழிகாட்டி

இச்சிறு குறிப்பு ஓர் நினவுரையாக
கருதின் இப்பதிவின் நோக்கம்
நிறைவுறாது.

யாழ் இந்து அன்னைக்கு புகழ்
தேடித்தருவதாயின் நல்ல
பெறுபேறுகளைப் பெற்றால்
போதுமானதா?

இல்லை...

பல வடிவ கட்டடங்களை
உருவாகினால் அன்னை
நிறைவுறுவாளா? பதில்
தெளிவில்லை ...
எமது பாடசாலை வடிகட்டி எடுத்த
மாணவர்களை கொண்டது,
ஆகவே பெறுபேறு என்பது
எதிர்பார்க்கக்கூடியதே.

ஆனால் பல்கலைக்கழக
அனுமதியோ சிலபெருக்கே
கைகூடும்.

அப்படியாயின் மற்றையோரின் நிலை?

இரண்டாம் தரம்..... மூன்றாம்
தரம்........
காலங்கள் பொன்னானவை,
மீண்டும் மீண்டும் எமது
திறமையை வெளிகாட்டினும்
கிடைக்கும் வாய்ப்போ குறைந்தே
செல்லும்
வேறு வழி?

இந்துவின் புதல்வர்கள்
நாடெங்கிலும் புகழோடு
வாழ்கிறார்கள்......ஒன்று சேரின்
நன்மைகள் பலப்பல.

பல்வேறு நாடுகளின்
கல்விச்சாலைகளின் கல்வி
வாய்ப்புகளை எமது கல்லூ
ரிச்சாலைக்கு கொண்டு வந்திடுக.
கல்வி வழி காட்டலை செய்திடுக,
எனது வேலத்தளமும் உங்களின்
தளத்தில் தொடலியாகும்.

நல்ல பல மாணாக்கரை
எட்டுத்திக்கும் கொண்டு
செல்வோம். தடையறாது
கல்விச்செல்வத்தை வாரி
வழங்க உங்களின் வளங்களை
புலமைப்பரிசில்களாக வழங்கவும்.

நாம் தரணியில்தனித்துவமாவோம்.

நண்பர்களின் நட்பு
நல்மாணாக்கரின்
வழிகாட்டியாகட்டும்.

ஒன்று சேர்ந்து சிறகு விரிப்போம்.

இந்துவின் மைந்தர்களை
மட்டுமல்ல மாறும் எமது
சக புதல்வர்களிட்கும் நிழல்
கொடுப்போம்.

எமது அன்னையை எமது
தேசத்தின் அன்னையாக்குவோம்.

சிந்தனைக்காக இவை
சிதறாது மணிகளை கோருங்கள்
சித்தத்தில் பணிகளை
வரிசையிடுங்கள்
அழகிய முத்துமாலை இந்து
அன்னைக்கே எம் நட்பு
எம்மினத்தின் வழிகாட்டி

**ஐ. சாரங்கன்**
(13 C Maths)






யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
JAFFNA HINDU COLLEGE
1890

# அந்த நினைவழியா நாட்களின் நினைவுகள்...

நேற்றுப் போலிருக்கிறது அந்த
நினைவழியா நாட்களின் நினைவுகள்..
அவற்றை மீட்டிப் பார்க்க முனையும் போது
இதயத்தில் மகிழ்ச்சிப் பிரவாகமும் கண்களில் கண்ணீர் ததும்பலுமாக
இருவேறுபட்ட உணர்வுகளில் தத்தளிக்க நேரிடுகிறது.

வாழ்வெனும் பாலைவனப் பயணத்தின் இடையில்
வந்த பசுஞ்சோலையான இளமைப் பருவத்தை எண்ணிப் பார்க்கையிலே
இனம் புரியாத உணர்வொன்று மனதிலே நர்த்தனமிடுகிறது.

கள்ளங்கபடமிலாத பிஞ்சு மனங்களோடு
கலந்து மகிழ்ந்த கனவு நாட்களை எண்ணிப் பார்க்கையில்
கனத்தே தான் போகிறது எம் நெஞ்சம்.
காசோ பணமோ கவினுறு மாளிகையோ
கடமையோ கடன்களோ இல்லாத காலமது.

எனினும் கரைபுரண்டோடிய கனிவுக்கும் களிப்புக்கும்
கடைசிவரை தடையேதும் இருக்கவில்லை.
நெஞ்சமெல்லாம் இனம்புரியாத துன்பம் கவிந்த போதெல்லாம்
நேருக்கு நேராகத் துயர் சூழ்ந்த போதெல்லாம்
நெருஞ்சி முள்ளாக நினைவுகள் வருத்திய போதெல்லாம்
நேசக்கரம் நீட்டிய நாட்களை நெஞ்சு அசைபோடுகிறது.

எப்படித்தான் மறக்க முடியும் அந்த நினைவுகளை..
எள்ளாக இருந்தாலும் எட்டாகப் பிரித்துண்ட காலமது.
பதுங்கு குழியினிலும் பால் நிலா ஒளியினிலும்
படித்த நினைவுகள் பம்பரமாகச் சுற்றுகிறது.
பதவியும் பட்டமும் பரிசும் குவிந்தாலும்
பள்ளிப் பருவத்துப் பசுமைபோல வந்திடாது.

எங்கெல்லாம் எம்மவர் சிதறி வாழ்ந்தாலும்
எம் அன்னை மண்ணில் இறும்பூதெய்திய காலத்தை
எப்படி நாம் மறக்க முடியும்.
வேற்று மண்ணில் வேரறுந்து வாழும் போதும்
வேகும் நினைவுகளோடு வேதனையில் துவளும் போதும்
வேனிலென வீசிப் போகிறது நினைவுகள்.

நிலத்திலும் புலத்திலும் எம் களத்திலும்
நீள் துயிலாய்ப் போன நேசமிகு நண்பரது நினைவுகள்
நெஞ்சைக் கிழித்துக் கூறு போடுகிறது.

இந்துவின் மைந்தராய் இனிய நினைவுகளோடு



எமதன்னை மடியில் தவழ்ந்த நாட்களை
இசையும் இனிமையும் இறை நினைவும்
இதயவறைகளில் இருப்பிடமாயிருந்த இளமைக் காலத்தை
இளமையின் இனிமை இதயமெலாம் தவழ
இடரின்றியிருந்த அந்த வசந்த காலத்தை
ஈரேழு பிறவிக்கும் வழிகாட்டி எமக்கு
இனிதே கல்வி புகட்டிய ஆசான்களின் அசைவுகளை
இனியெங்கள் பிறவியிலே இசைமீட்ட முடியாதென்று
இளைத்திருந்த வேளையிலே...


இளையோர் நாம் கிளர்ந்தெழுந்து
இனியொரு விதி செய்வோமென இன்ப நினைவுகளை
இசை மீட்கத் துணிந்து விட்டோம்.
நாடிழந்து எம் நாவிழந்து நாதியற்று வாழ்ந்தாலும்
நாம் ஒரு தாய் மைந்தரென நாமிங்கே அணிதிரள்வோம்.

பள்ளிப் பருவத்துப் பசுமை நினைவுகளைப்
பாசி துடைத்துப் படரவிட்டுப் பகிர்ந்திடுவோம்.
இனியெமக்கு ஏதுதடை, இதுவெமக்கு வந்த கொடை.
கட்டறுத்துப் பாயும் களிப்புடனே
கண்ணீரும் கலந்தோடக்
காளையர் நாம் கலந்திடுவோம்.

நேற்றைய பொழுதுகளின் நேச நினைவுகளை
நெஞ்சமெலாம் நிறைத்து எம் நினைவுகளில் சுமந்து கொண்டு
பாரெல்லாம் பரந்து பறவைகளாய்ப் பறக்குமெங்கள்
பாலப் பருவத்துப் பசுமை நினைவுகளைப்
பசுமரத்தாணியெனப் பளிங்காய்ப் பதித்து விடப்
பார்த்திபனார் கண்ட பல நாட் கனவு இது.

கனவு நனவாகும் களிப்புடனே காளையர் நாம்
கவலையேதுமின்றிக் காசினியில் காத்திருப்போம்.

**ம. அரவிந்தன்**
வகுப்பு 13D (உயிரியல்)





# யாழ் இந்துக் கல்லூரியில் இருந்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு...

யாழ் இந்துக் கல்லூரியிலே எனக்கு இசை கற்பித்த மதிப்பிற்குரிய ஆசிரியர்கள் செல்வி. தங்கலட்சுமி செல்லத்துரை மற்றும் தாவடியூர் பத்மநாதன் ஆகியோர் மிக்க அன்போடும் அரவணைப்போடும் எனக்கு இசை கற்பித்தார்கள்.

ஆனாலும் கூட "இசைத்துறையை எனது வாழ்வாகக் கொண்டு நான் வீணாகிப் போய் விடக்கூடாது" என்றும் சமூகத்தில் உயர்ந்த படிப்புகளாக ஏற்றுக்கொள்ளப்படும் நிலையிலுள்ள மருத்துவத்தையோ பொறியியலையோ கற்றுக் கொண்டு இசையை ஒரு பகுதிநேர படிப்பாகவும் சேவையாகவும் நான் தொடர வேண்டும் என்பதை அவர்கள் விரும்பினார்கள்.

தங்களது குழந்தைகளுக்கு எவ்வாறு அறிவுரை பகிர்வார்களோ அதே போலவே அவர்கள் எனக்கும் மனசுத்தியோடு அறிவுரை பகிர்ந்தார்கள். ஆயினும் அக்காலத்தில் ஆளுமை மிக்க அதிபராக இருந்த திரு. பஞ்சலிங்கம் அவர்கள் "பிள்ளைக்கு எந்தத் துறை பிடிக்குமோ அந்தத் துறையிலேயே அவனுக்கு ஆளுமை அதிகம் இருக்கும் ஆகையால் பிள்ளை விரும்பிய துறையில் அவனைக் கற்க விடுவதே அவனுடைய எதிர்காலத்திற்கும் இவ்வுலகிற்கும் நன்மை தரும்" என்று மேடைகளிலே மட்டும் பேசாது நடைமுறையிலும் அதனையே தொடர்ந்தும் என் போன்ற மாணவர்களுக்குக் கூறி வழிகாட்டிக் கொண்டேயிருந்தார்.

யாழ் இந்துக் கல்லூரியிலே கல்லூரித் தொடக்க இறைவணக்கத்தைப் பாடுவதற்கு, திறந்தவெளியில் மின்சாரம் இல்லாததால் ஒலிபெருக்கி வசதி அற்ற சூழ்நிலைகளில் எல்லா மாணவர்களுக்கும் கேட்கும் வகையில் பாடவேண்டிய தேவை ஏற்படுகின்ற போதெல்லாம், என்னைத் தேவாரம் பாடுமாறு எனது அதிபர் ஆசிரியர்களும் மாணவ நண்பர்களும் கேட்பது வழக்கம்.

அவ்வாறு பெருங்குரலெடுத்துப் பாடிய காலம் போய் இன்று ஒலிவாங்கிக்கு மட்டுமே கேட்கக் கூடியவாறு மிக மெதுவாக இசை நிகழ்வுகளில் நான் பாடுவதும் மாணவர்களுக்கு அவ்வாறு பாடுமாறு குரற் பயிற்சியளிப்பதுமாக காலம் மிகவும் மாறிவிட்டது அல்லது முன்னேறி விட்டது எனலாம்.

ஆனாலும் யாழ் இந்துக் கல்லூரியிலே விஞ்ஞான மற்றும் கணிதப் பாடங்கள் கற்றுக்கொண்டிருந்தவர்கள் கூட என்னைப் பாட வைத்து மகிழ்ந்தும் எனது பாடும் திறனுக்காக என்னை அதிகமாக மதித்தும் எல்லாவற்றிலும் முன்னுரிமை கொடுத்தும் மிக அன்பாகவும் உயர்வாகவும் நடத்தினார்கள்.



அவ்வாறானதொரு சமூகத்தில் உயர்ந்ததாகக் கருதப்படும் படிப்புகளைப் படித்துக் கொண்டிருந்தவர்கள் கலையை மதித்த அளவிற்கு இன்று நான் கலையைத் தொழிலாகக் கொண்டுவிட்ட பிறகு என்னைச் சுழ இருக்கும் கலை உள்ளங்கள் கலைக்கு உரிய மதிப்பளிக்காத போது இவ்விரண்டு செயற்பாடுகளையும் ஒப்பிட மிக விநோதமாக இருக்கின்றது.

இன்றும் கூட யாழ் இந்துவின் மைந்தர்கள், அதாவது எனது மாணவ நண்பர்கள் பல்வேறு சமூக நிகழ்வுகளில் சந்திக்கின்ற

போதும் முகநூல் மற்றும் சமூக வலைத்தளங்களுக்குடாக இணைகின்ற போதும் அவர்களது மனதில் இசைக்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுத்து வைத்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து ஆனந்தமடையக் கூடியதாக இருக்கும்.

அவர்கள் கலையை இரசிப்பதற்காக மட்டுமன்றி ஒரு இனத்திற்குரிய அடையாளமாகவும் கருதுகிறார்கள் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

யாழ் இந்துக் கல்லூரியிலே கல்வி கற்ற காலங்களில் புண்ணியலிங்கம் ஆசிரியர் அவர்கள் இந்து இளைஞர் கழகத்தினராகிய என் போன்ற மாணவர் குழுவினரைச் சேர்த்துக் கொண்டு திருக்கேதீஸ்வரத்தின் திருவிழாக் காலங்களில் அங்கேயே சென்று தங்கியிருந்து ஆலயத்தைச் சுற்றி பஜனை நடாத்துவதும் அந்த பஜனைக்குழுவின் இன்னிசையால் கவரப்பட்டு அடியார் கூட்டம் பெருந்திரளாக எம்முடன் இணைந்துகொண்டு நாம் பாடும் திருமுறைகளைத் திரும்பப் பாடி இறையுணர்வில் திளைத்திருந்த காட்சிகள் இன்று நினைத்தாலும் மெய்சிலிர்க்க வைப்பவை.

நான் மாணவ முதல்வராக மாணவரின் வாக்கு எண்ணிக்கைகளின் அடிப்படையில் எவ்வித பிரச்சாரமும் செய்யாது மூன்றாவதாகத் தெரிவு செய்யப்பட்டதற்கு யாழ் இந்துவின் மாணவர்கள் கலையின் மேல் கொண்டிருந்த பக்தியே காரணமாக இருந்தது.

அமைதியாக இருக்க வேண்டும் நேர்வரிசையாக ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குச் செல்ல வேண்டும் வழிபாட்டு நேரங்களில் ஏளனமாகச் சிரிப்பதோ மற்றவர்களுடன் சேட்டை செய்வதோ கூடாது" என்றெல்லாம் மாணவ முதல்வர் சபையின் செயலாளர் என்கின்ற முறையில் நான் மாணவர்களுக்கு அறிவுறுத்தி அதனை மிகக் கடுமையாக நடைமுறைப்படுத்த முயலும் போதெல்லாம் பயத்தினால் அன்றி



நான் மனம் வருந்திவிடக்கூடாது என்கின்ற அன்பின் காரணமாக நான் சொல்வதையெல்லாம் மாணவர்கள் அன்போடு கேட்டுச் செயற்படுவார்கள்.

மாணவ முதல்வர்கள் கையில் தடி வைத்திருக்கவோ அல்லது மாணவர்களை அடிக்கவோ கூடாது என்று பாடசாலை அதிபர் கடுமையான உத்தரவைப் பிறப்பித்திருந்த போதிலும் நான் மட்டும் கையில் தடி வைத்திருப்பதையும் குழப்படி செய்யும் மாணவர்களை அவ்வப்போது நான் தடியினால் தண்டிப்பதையும் கூட மாணவர்கள் அன்போடு ஏற்றுக் கொண்டார்களேயன்றி எவருமே அவ்விடயத்தைப் பற்றி அதிபரிடம் முறையீடு செய்யவேயில்லை. அந்தளவிற்கு கலை என்கின்ற அன்புக் கட்டமைப்பிலே அவர்கள் கட்டுண்டு கிடந்தார்கள்.

இன்றும் கூட வங்கிகளுக்குச் செல்கின்ற போதும் மருத்துவமனைக்குச் செல்கின்ற போதும் என்னை மறக்காது ஞாபகம் வைத்திருக்கின்ற யாழ் இந்து மாணவ நண்பர்கள் என்னை மூன்று நாள் முழங்காலில் இருத்தியுள்ளீர்கள்,

என்னை ஐந்து நாட்கள் தடியினால் அடித்திருக்கிறீர்கள்..

என்றெல்லாம் புன்னகையுடன் தமது ஞாபகங்களைப் பரிமாறிக் கொள்கின்ற போது அந்த இன்பமான உலகத்திற்கு மீண்டும் சென்று வாழ மாட்டோமோ? என்று சில கணங்கள் எனது மனம் ஏங்கும்.

இந்நேரத்தில் யாழ் இந்துக் கல்லூரியில் என்னால் மறக்க முடியாத இன்னொருவராக சத்தீஸ் மாஸ்ரர் இரசாயனவியலிற்காக கல்லூரியில் இணைந்து கொண்டார்.

பாடசாலைப் படிப்பிற்கு மேலதிகமாக அவரது தனியார் வகுப்புகளிற்கும் நாம் செல்வதுண்டு. அவர் தனது தனியார் வகுப்புகளிற்கு அக்கறையோடு படிக்கக்கூடிய ஒழுக்கமான தரமான மாணவர்களை மட்டுமே தெரிவு செய்வது வழக்கம்.

இந்த 3 இயல்புகளில் ஏதாவது ஒன்று இல்லையெனினும் வகுப்புகளில் சேர்த்துக் கொள்வதில் வெளிப்படையாக முகத்திற்கு நேரே கூறுவதன் மூலம் அவர் தவிர்த்துக் கொள்ளுவதுண்டு.

அதை விட மாணவர்கள் எவரேனும் தனது வகுப்பில் அக்கறையில்லாது நடந்து கொள்வதை அவதானித்துக் கொண்டால் உடனடியாகவே அம்மாணவரை வீட்டிற்கு அனுப்பிவிடுவதற்கும் அவர் தயங்குவதில்லை.

அவ்வாறானதொரு தனியார் வகுப்பில் அவரது வீட்டில் நான் இரசாயனவியல் கற்றுக்கொள்வதற்காக இணைந்து கொண்டேன்.

இசையிலே இருந்த அதீத நாட்டம் காரணமாகவும் ஏதோ ஒரு கடமைக்காக நான் விஞ்ஞான பாடங்களைக் கற்றுக் கொண்டிருந்ததாலும் அவரது வகுப்பில் நான் தூங்குவதுண்டு.

நான் அவ்வாறு தூங்கி விழுந்து கொண்டிருக்கும் போது பின்னால் இருக்கும் எனது நண்பர்கள் எனது காதிலே சுண்டி விடுவார்கள்.

நான் திடுக்குற்று எழுகின்ற போதெல்லாம் சத்தீஸ் மாஸ்ரர் என்னைக் கடிந்து கொள்வதற்குப் பதிலாக என்னைச் சுண்டி எழுப்பி விட்ட மாணவர்களைக் கடிந்து கொள்வார்.

அதை விட "தூக்கம் என்பது தானாக வருவது தூங்கப் போகிறேன் என நினைத்து தூக்கம் வராத எவரும் தூங்கி விடவே முடியாது ஆகையால் தூங்குபவர்களை துன்புறுத்துவது



நியாயமல்ல” என்று அவர் விளக்கம் கூறி அம்மாணவர்களை எச்சரிக்கை செய்வது எனக்கு மிகவும் விநோதமாக இருக்கும்.

வகுப்பு முடிவடைந்து எல்லா மாணவர்களும் வெளியேறிய பின்பு என்னை அவர் தனது வீட்டிற்குள் அழைத்துச் சென்று என்னை அவரது மனைவியிடம் சொல்லி எனக்குத் தேநீர் கொடுக்கச் சொல்லுவார்.

அவர் மனைவியும் பிள்ளையும் ஒரு பாடலைப் பாடுமாறு கேட்டு இரசித்துவிட்டு அதன் பின்னர் மூவரும் இணைந்து தூக்கக் கலக்கமில்லாது கவனமாகத் துவிச்சக்கர வண்டியில் வீடு போய்ச் சேருமாறு அன்போடு என்னை வழியனுப்பி வைப்பார்கள்.

மாத முடிவுகளில் நான் மாதாந்தக் கல்விக் கட்டணத்தை அவருக்குக் கொடுக்கச் செல்லும் போது அதனை வாங்குவதற்கு அவர் மறுத்து விடுவார். மற்றைய மாணவர்களால் மிகப் பொல்லாதவராகவும் மற்றவர்களின் முகம் பாராது எதையும் பளிச்சென்று கூறிவிடும் சத்தீஸ் மாஸ்ரர் என்னிடம் இவ்வாறு நடந்து கொள்வது மிகவும் ஆச்சரியமாக எனக்கு இருப்பதுண்டு.

பணம் வாங்காததற்கு அவர் கூறுகின்ற விளக்கம் இன்னும் விசித்திரமாக இருந்தது.

எனது வகுப்பினுள் வந்து படித்தவர்களிடம் மட்டுமே நான் பணம் வாங்குவேன்.. என்றார். நான் துணிச்சலாக அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்டேன்...

அவ்வாறாயின் ஏன் என்னை தாங்கள் இவ்வளவு நாளும் தங்களது வகுப்பை விட்டு துரத்தவில்லை?.... அதற்கு அவர்,

இரசாயனவியலில் விருப்பமின்மை உங்களிடம் காணப்பட்டாலும் வாழ்வில் முன்னேற வேண்டும் என்கின்ற வெறி உங்களிடம் காணப்படுகின்றது.

நீங்கள் படிக்க வேண்டும் என்று நினைப்பது விஞ்ஞான பாடங்கள் இல்லையெனினும் இசைத்துறையில் சாதனை படைக்க வேண்டும் என்கின்ற முனைப்பு உங்களிடம் காணப்படுகின்றது.

இப்படியானதொரு சூழ்நிலையின் மத்தியில் எனது பெற்றோர் சுற்றத்தினரின் விருப்பத்தை மீறி நான் எனக்கு மிகவும் விரும்பிய துறையாகிய இரசாயனவியலைப் படித்துப் போராடி முன்னேறியதாகையால், அவ்வாறானதொரு சூழ்நிலையிலிருக்கும் உங்களை இரசாயனவியல் கற்காவிட்டாலும் கூட எனது வழிகாட்டலில் வைத்திருக்க ஆசைப்படுகிறேன்... என்று பதிலளித்தார்.

என்னையறியாமல் எனது கண்களிலிருந்து ஆச்சரியக் கண்ணீர் ஊற்றெடுத்தது. தனது வகுப்பில் இணைந்து படிப்பில் கவனக் குறைவாக இருப்பவர்களுக்கு சிம்ம சொற்பனமாக இருந்த இன்னொருவர் தாவரவியல் ஆசிரியர் குணசீலன் அவர்கள்.

அருள் மாஸ்ரரின் Science Hall இல் அவரிடம் தாவரவியலைக் கற்றுக்கொள்வதற்காக நானும் இணைந்திருந்தேன்.


அவரது வகுப்புகளிலும் எனது பாடல்கள் ஒலித்துக்கொண்டிருக்கும்.

இன்றும் கூட தன்னிடம் கல்வி கற்று நாட்டிலும் உலகிலும் பிரபலமாக இருக்கும் வைத்தியர்களைப் பற்றி, அவர் தன்னிடம் தற்போது கல்வி கற்று வரும் மாணவர்களுக்குக் கூறுவதோடு, என்னைப் பற்றியும் அவர் அவரது மாணவர்களுக்கு சொல்ல மறப்பதில்லை

சமூகத்தோடு போராடித் தான் விரும்பிய துறையிலே தான் விரும்பிய நிலையை அடைந்தவன்.. என்று அவரது ஒவ்வொரு மாணவர் அணியினருக்கும் அவர் என்னை அடையாளப்படுத்தத் தவறுவதில்லை.

இவ்வாறான இன்பமயமான யாழ் இந்துக் கல்லூரி என்கின்ற உலகிலிருந்து பிரிந்து கொண்டு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை நோக்கி எனது கல்விப் பயணம் தொடர்ந்தது.

**கலாநிதி. ச. தர்ஷணன்**
வகுப்பு 13 E (உயிரியல்)
தலைவர், இசைத்துறை
யாழ் பல்கலைக்கழகம்.



# யாழ் இந்துவின் நினைவுகளிருந்து.......

காலை 6 மணி, இன்னும் இருபது நிமிடங்களில் காலை உணவை முடித்து எனது வேலைக்கான கார்ப்பயணம்

- இன்னும் முப்பது நிமிடங்களில் மருத்துவ மாணவர்களுக்கான கற்பித்தல்

- சரியாக 8 மணிக்கு எனது அன்றாட ward round

- எனது இளைய மருத்துவர்களுடன் பற்பல நோயாளிகளின் பலவிதமான நோய்கள் பற்றிய கலந்துரையாடல்

- ஒவ்வொரு நோயாளியுக்கும் சரியான உலகத் தரம் மிக்க சிகிச்சை வழங்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்தல்

- மருத்துவசாலை முகாமைத்துவக் கூட்டம்

- இடைக்கிடை மின்னஞ்சல்கள்
- மாலையானவுடன் வெளிநோயாளர் பிரிவில் நீரிழிவு நோயாளிகள்



- ஓய்வு நேரங்களில் வீட்டிலோ பலவிதமான பொழுது போக்குகள், டிவி , மருத்துவ கணனி மென்பொருள் ஆராய்ச்சி என்று பற்பல...

இப்படிப்பட்ட பல பரிமாணங்களை எனது வாழ்வுக்கு காட்டியதில் யாழ் இந்துவிற்கு மிகப் பெரிய பங்கு உள்ளது.

எனது வாழ்க்கை எனது சக பள்ளி மாணவரது வாழ்க்கையை போல இவ் வருடத்துடன் நாலு பூச்சியம் வயது ஆகப்போகிறது.

இத்தருணத்தில் எனது பள்ளி வாழ்கையின் நினைவுகள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒரு கடை மாணாக்கனும் சரியான யாழ் இந்து ஆசிரியரது கண்காணித்தலில் முதல் மாணாக்கனாக வருவான் என்பதற்கு நானும் ஒரு உதாரணம்.


இதை மருத்துவரீதியில் கூறுவதாக இருந்தால் யாழ் இந்துவில் கண்டு பிடிக்கப்பட்ட மருந்துகளில் நானும் ஒரு மருந்து.

சாதாரண மூலப் பொருளாக இருந்த என்னை பற்பல ஆராய்ச்சிப் படிகளுக்கு உட்படுத்தி சரியான மருந்தாக மாற்றுவதற்கு பல ஆசிரியர்கள் மட்டும் அல்ல பல மாணவர்களும் நேர் முகமாகவோ அல்லது மறை முகமாகவோ காரணமாக இருந்துள்ளனர்.

எனது முதல் நாள் பாடசாலையில் எனக்கு இடப்பட்ட பட்டமோ பொட்டன். இப்பட்டத்தை எனக்கிட்ட பண்டிதர் சண்முகலிங்கம் மாஸ்டர் இன்று எம்மிடமில்லை.

ஆனால் அன்று அவர் சொன்ன வார்த்தை இன்னும் எனக்கு நினைவிருக்கிறது....

'உனது பொட்டு உன்னை முன்னுக்கு கொண்டு வருமென்று'.



இத்துடன் சீவரத்தினம் மாஸ்டர் விசில் அடித்ததற்கு முழங்காலில் நிற்பாட்டியது, திசைவீரசிங்கம் மாஸ்டரின் கை கன்னத்தில் முத்தமிட்டதென பலப்பலவற்றை கூற லாம்.

நான் எனது கல்வி நிலையை முன்னேற்ற மிகவும் உறுதுணையாக இருந்ததில் எனது நண்பர்களும் அடங்கும். அவற்றுள் சில உதாரணங்களை இங்கு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

அவர்களுக்குமே இன்று வரை தெரியாமலிருக்கலாம்.

நான் அவர்களிட மிருந்து பலவற்றைக் கற்றுக் கொண்டுள்ளேன். நான் பின்வரும் நினைவுகளை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கிரிதரன் - இவன் இன்று எங்களுடன் இல்லை என்றாலும் எங்களில் பலருக்கு அவனது கணீரென்ற குரல் நினைவிருக்கும். அவனது தமிழ் உச்சரிப்புக்கு நிகர் அவனே தான்.
பண்டிதர் சண்முகலிங்கம் மாஸ்டர் - அவரது வேட்டியும் அவரது சைக்கிளும் அவரது எளிமையான வாழ்க்கை நடை முறைகளும் தான் அவர் என் இதயத்தில் இடம் பிடிக்க காரணம்....
காலன் அவரை இள வயதில் கூட்டிசெல்வதற்கும் இவை தான் காரணங்களோ?

தவமணிதாசன் மாஸ்டர் எங்களுக்கு விஞ்ஞானத்தை வாழ்க்கையில் எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதை கற்றுக் கொடுத்தார்.

நந்தராஜனின் கணிதத்திறமை, பிரசாந்தனின் அச்சு போன்ற எழுத்து, குமரேஸின் பொறுமை, சிவசுதனின் அபார சிந்தித்தல் திறமை என்பன அவர்களுக்கு பக்கத்தில் இருந்ததால் எனக்கும் கொஞ்சம் கொஞ்சம் கிட்டியது.

இப்படிப் பல பல நினைவுகள் எங்கள் எல்லோரது மனதிலும் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கின்றது.

நான் இங்கு குறிப்பிட எவையும் எவரது மனதையும் புண்படுத்துவதற்கோ அல்லது எனது பெருமைக்காகவோ சொல்லவில்லை.

இன்று நாங்கள் எல்லோரும் கூடுவதற்கு தேவையான ஏற்படுகளை எல்லாம் செய்து கொடுத்த நிகழ்வு ஒருங்கிணைப்பு குழுவுக்கும், முக்கியமாக பார்த்தீபன் அவர்களுக்கும் எனது மனம் நிறைந்த பெரும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**Dr. சி. சிவப்பிரியன்**
வகுப்பு 13D (உயிரியல்)
Consultant in Diabetes and Endocrinologist































யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
JAFFNA HINDU COLLEGE
1890
3 11 '93


UNION



# TEAM MP 2015



# மீண்டும் பள்ளிக்கு




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
மீண்டும் பள்ளிக்கு 2015
சென்னை, இந்தியா


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
மீண்டும் பள்ளிக்கு 2015


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
சென்னை, இந்தியா
யாழ்
இந்து
கல்லூரி
Jaffna
Hindu






யாழ்
இந்து
கல்லூரி
Jaffna
Hindu






யாழ்
இந்து
கல்லூரி


யாழ்


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
மீண்டும் பள்ளிக்கு 2015
சென்னை, இந்தியா
யாழ்
இந்து
கல்லூரி
Jaffna
Hindu
College










Jaffna
Hindu College
யாழ்ப்பாணம்






யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
94 பழைய மாணவர்களின்
மீண்டும் பள்ளிக்கு 2015
சென்னை, இந்தியா
Jaffna
Hindu College
"Meendum
Pallikku"
2015
94
BATCH
International
Get-together











யாழ்
இந்து


யாழ்
இந்து
கல்லூரி


யாழ்
இந்து


யாழ்
















யாழ்
இந்து
கல்லூரி


125
Years




மீண்டும் பள்ளிக்கு 2015
சென்னை, இந்தியா
30-03-2015
03-04-2015




Gradient
Graphics
Design for Web & Print
www.gradientgraphics.co.uk • Nimalan 079 3136 4687


*professional*
# WEDDING
PHOTOGRAPHERS



**PhotonImage.com**

www.photonimage.com
facebook.com/PhotonImageProductions

# SPEED
## CONSULTANTS LTD



Accountants and Tax advisors

Karan Thanalingam
speed. Consult@hotmail.co.uk

974 Easter Avenue
Ilford
London
IG2 7SF



Ardenta Consulting Limited
Complete data recovery and computer forensic solutions.

Contact: Stephen Jey, Director
Regal House, 70 London Road, Twickenham, TW1 3QS, United Kingdom.
1483 549 322 • 07863 326 696 • stephen.jey@ardentaconsulting.co.uk • www.ardentaconsulting.c

MARCH
30
MONDAY

# தொடக்க நாள் நிகழ்வுகள்

| உடை |
| --- |
| வேட்டி சட்டை |
| **உணவு** |
| சைவம் |

| | |
| --- | --- |
| 09:00 | நண்பர்கள் வரவும் பதிவும் |
| 10:00 | இறை வணக்கம், அக வணக்கம், கல்லூரிப் பண் |
| 10:15 | வரவேற்பு உரை - கு. பார்த்தீபன் |
| 10:20 | நண்பர்கள் அறிமுகம் |
| 10:35 | பிரதம விருந்தினர் உரை |
| 10:50 | நினைவுப் பகிர்வு - அதிபர்/ஆசிரியர்கள் |
| | திரு. ஐ. தயானந்தராஜா, திரு. அ. பஞ்சலிங்கம், திரு. ப. மகேஸ்வரன், திரு. ச. லக்ஸ்மணன், திரு. சொ. சோதிலிங்கம், திரு. இ. பாலச்சந்திரன், திரு. சி. கிருஷ்ணகுமார் |
| 12:00 | பிராந்தியப் பிரதிநிதிகள் உரை |
| | அவுஸ்திரேலியா - திரு. சி. சிவசுதன்<br>ஆசியா - திரு. ப. சசிவர்ணன்<br>வட அமெரிக்கா - திரு. சு. மகேஸ்வரன்<br>ஐரோப்பா - திரு. எஸ். ஜெயசீலன் |
| 12:20 | குழுப்படம் எடுத்தல் |
| 12:30 | இசை மழை - மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி<br>சென்னையின் முன்னணி இசையமைப்பாளர் சதீஸின் இசையில், திரைப்பட பின்னணி பாடகர்கள் கல்பனா , அனந்து, கிருஸ்ணராஜ், பிரச்சன்னாவுடன், இன்னும் பல பாடகர்கள். |
| 13:30 | மதிய உணவு |
| 16:00 | நன்றியுரை: திரு. அ. குலதீரன் |
| 16:30 | **Your own time for shopping /outing** |

Night Stay > Hotel The Savera



MARCH
31
TUESDAY

# 40TH BIRTHDAY CELEBRATION



07.00 **Breakfast** > Hotel The Savera

10.30 **Travel to Beach Resort**
Radison Blu Temple bay




12.30 **Buffet Lunch** With Teachers
Veg/Non-Veg

13.30 **Checkin** > Radison Blu Temple bay

19.30 **40th Birthday Celebrations**
Dress: Casual MP T Shirt

21.00 **Dinner**
Veg/Non-Veg



**Night Stay** > Radison Blu Temple bay







APRIL
01
WEDNSDAY

# TEAM GATHERING AND GRAND LUNCH

07.00 **Breakfast** > Radison Blu Temple bay

10.30 **Beach activities**
subject to sea conditions / saftey first!

12.30 **Grand Buffet Lunch**
Veg/Non-Veg

14.00 **Team Gathering & Sharing Memories**

17.00 **Sports Activities**

19.30 **Garden Dinner**
Veg/Non-Veg

**Night Stay** > Radison Blu Temple bay





APRIL
02
THURSDAY

# நண்பர்களுடன் சேர்ந்து சுற்றுலா

07.00 **Breakfast** > Radison Blu Temple bay

10.00 **Getting ready for checkout**

11.30 **Checkout**

12.00 **Sightseeing Tour (Chithamparam)**

13.30 **Lunch** > On the way

14.30 **Sightseeing Tour Continued**


20.00 **Dinner** > On the way

22.00 **Back to Hotel the Savera, Chennai**

**Night Stay** > Hotel The Savera









APRIL
# 03 நிறைவு நாள் நிகழ்வுகள்
FRIDAY

07.00 **Breakfast** > Hotel The Savera

09.00 **Ninaivu Pakirvu**

11.30 **Book Release / Photos Releases**
Chief Guest Swami. Atmaghananthaji
(Former head of Ramakrishna Mission Sri Lanka.)

13.00 **Lunch** / Vegetarian

15.00 **Finance report submission**

19.00 **Dinner** / Vegetarian

**'MEENDUM PALLIKKU' CONCLUDES**

**Night Stay** > Hotel The Savera








யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
94 பழைய மாணவர்களின்
மீண்டும் பள்ளிக்கு 2015
சென்னை, இந்தியா
125 Years of
30-03-2015
Jaffna Hindu College
"Meendum Pallikku"
2015
94
BATCH
International Get-together

IT16065604

# Our Sponsors

| | |
|---|---|
| Iynkaran Thanalingam | £ 425 |
| Atchuthan Jeganathan | £ 250 |
| Thusiyantharajah Thanabalasingam | £ 250 |
| Kodeeswaran Arasaratnam | £ 150 |
| Girupharan Gunanayagam | £ 250 |
| Thananjeyan Nadarasa | £ 250 |
| Aravinthan Mahalingam | £ 200 |
| Anbuchelvan Srivisakarajah | £ 200 |
| Mathanakumara Somaskanda | £ 250 |
| Raguthas Jeyapalakrishnar | £ 150 |
| Balakumar Pushbanathan | £ 250 |
| Nimalan Subramaniam | $ 400 |
| Chandrakanthan Sinnarasa | $ 400 |
| Yasotharan Murugaiah | $ 400 |
| Kumaradevan Santharajah | $ 400 |
| Tharshan Jayaweerasingam | $ 300 |
| Paranthapan Selvanayagam | $ 300 |
| Srithayalan Shanmugalingam | $ 300 |
| Pratheep Anandan | $ 400 |
| Satheesharan Prasad | $ 400 |
| Seralathan Kamalanathan | $ 250 |
| Tharmarasa Ratnasingham | $ 400 |
| Jasinthan Arulananthan | $ 100 |
| Kuganeswaran Thambu | $ 50 |
| Gunarajah Thuraisingham | $ 400 |
| Kulatheeran Ambalavanar | $ 750 |

# அர்ப்பணம்

கல்விக் கனவுடனே கல்லூரி சென்றீர்கள்
காலம் அழைத்ததுவோ
காலன் தான் அழைத்தானோ
காவியநாயகராய் காலமானீர்கள்
கண்கள் பெருகிட கனத்த நெஞ்சுடனே
கரங்கூப்பி வணங்குகிறோம்
ஒருதரம் செவியுடன் விழிகளை திறவீரா

சிவசங்கர், சிவகணேசன், சிவநேசன், சிவகுமார்
கிரிதர பாலசொருபமாய்
சதீஸ் நமணா என நாமுமை அழைக்கையில்
ஆனந்த ரூபமாய் சுரேந்திரராஜனாய்
இருந்தும் இல்லாமலும்
மறைந்தும் மறையாமலும்
அவனடி சேர்ந்தீர்கள் அர்ப்பணங்கள் உங்களுக்கு.



# கல்லூரிச் சாலை

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்
(இந்துவின் முன்னாள் ஆசிரியர்)



பல்லவி

யாழிந்துதன் அகங்குலாவும் கல்லூரிச் சாலை
ஈழ ஞானத் தேனீக் கூட்டம் எழில்தரும் சோலை

அனுபல்லவி

சூழஇரு மருங்கும் பள்ளிப் பணிமனை வகுப்பறைகள்
வேளைமணி ஒலிக்கமைய விரைந்துலவு குருக்குலங்கள்

சரணம்

நூறுபல ஊரிருந்தும் நூல்சுமந்து வருஞ்சிறுவர்
கூறி இந்து மைந்தரென்று குலவி மகிழும் நெறியர்!
பாடவேளை பாடமயம்! பணிகள் போது பணியின்மயம்!
ஆடுகளம் ஆட்டமயம்! ஆய்வுகூடம் ஆய்வுமயம்!
(யாழிந்துதன்)

அந்திபகல் பந்துகளின் அரவமெழும் ஆடுகளம்!
அரசுநிழல்! பார்வையாளர் ஆரவாரம் ஓங்கும் கூடம்!
இந்தப்பக்கம் இசை கலைகள், ஈழம்அறி பெருவிழாக்கள்
ஏந்தும் குமாரசுவாமி எழிற்பெரு மண்டபங் கொள்
(யாழிந்துதன்)

வானில் மாடி வகுப்பறைகள், மாணவர்கள் நிறைவிடுதி
ஞானஒளி வைரவனார் நண்ணு கோவில், நூலகங்கள்
கல்வி, கல்வி யூக்கமிங்கு கனிந்தெழவே மாணவார்க்குப்
நல்லெடுத்துக் காட்டாய் ஞானம் கற்றே ஊட்டும் குறவர்கூட்டம்
(யாழிந்துதன்)

பழையமாணவர் சங்கங்கள் பாரினில் எங்கும் நாட்டி
வளநிதி சேய்கள் நல்க வையம் ஏத்தும் திறன்கள் ஊட்டி
புயல்வேகச் செயல்வீரப் புதல்வர்களைத் தந்து தந்து
முயல்தீரம் மூத்துநிற்கும் முதன்மைபெறு கல்லூரியாம்!
(யாழிந்துதன்)

நல்லநல்ல வீணைகளை நல்ல நறும் நாதம் நல்க
வல்லனவாய் வளம்படுத்தும் வழக்காறு கொண்ட இந்து!
கடைந்தெடுத்த ஈழத்தமிழ்க் கட்டிவெண்ணெய் நெய்யினிலே
சுடர்ந்து வகுக் கொளிவழங்கும் தொல்விளக்கு இந்து அன்னை!
(யாழிந்துதன்)

எழுதிடாத யாப்பெனவே இனிய பல மரபுகளை
ஏற்றெவரும் நடக்கும்படி இன்றுவரை அழகழகாய்த்
தழுவி நிற்கும் இந்து அன்னை தன்குழுவில் சேர்ந்திடுவோர்
சால்நெறிய ராய்த்திருந்தும் சரித்திரம் தொடர்ந்துவா...
(யாழிந்துதன்)

நாற்பதாம் அகவைநண்ணும் இந்து பழம் மாணவர்கள்
நாடுபல வாழ்தொண்ணூற்று நான்கின் உயர்தரம் பயின்றோர்
ஏற்படுத்தி ஒன்றுகூடல், இந்து தந்த இளமை வாழ்வின்
இன்பங்களை மீண்டுங் காணும் எழில்நிகழ்வு ஏந்திமகிழ்!
(யாழிந்துதன்)